# மன்னாரில் ராணுவத்தினர் சேட்டை; சாரணர்களை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119 தந்தி: வைரம்

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 359
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 25 ஜுல்கஃ 29 சனிக்கிழமை [7-2-70]

புதுக்கடை திறப்பு விழா
அன்புடையீர்!
நிகழும் சௌமிய வருஷம் தை மாதம் 25-ம் திகதி (7-2-1970) சனிக்கிழமை காலை 7-மணியளவில் வரும்சுபவேளையில் 59-ம் இலக்க மின்சார நிலைய வீதியில் நாங்கள் புதிதாக திறக்க இருக்கும்
பிடவை நிலையத்துக்கு
சமுகந்தந்து ஆரம்ப வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.
இங்ஙனம்,
யாழ்ப்பாணம் கோப்பறேசன் பங்காளர்கள்
59, மின்சார நிலையவீதி,
பெரியகடை, போன்: 605
யாழ்ப்பாணம். 1484

## தாக்கி சைக்கிள்களை குளத்தில் வீசினர்

### பொலிசில் புகார்

தள்ளாடி, வெள்ளி

மன்னாரில் தாழ்வுப்பாடு கிராமத்தைச் சேர்ந்த பத்துச் சாரணர்கள் சைக்கிளில் சென்றபோது, சாதாரண உடையணிந்திருந்த இராணுவச் சிப்பாய்கள் சிலர் அவர்களைத் தாக்கியதுடன் அவர்களது சைக்கிளையும் பறித்து குளத்தில் வீசியதாகப் பொலிசில் செய்யப்பட்ட புகார் சம்பந்தமாக மன்னார் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென் திரு. பிலிப்பெரேரா புலன் விசாரணை செய்து வருகிறார்.

சில தினங்களுக்குமுன் நடந்தாதகக் கூறப்படும் இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

தாழ்வுப்பாடு கிராமத்தைச்சேர்ந்த பத்துசாரணச் சிறுவர்கள் தாழ்வுப்பாட்டிலிருந்து மடுவுக்குச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தனராம். வழியில் நின்ற சிலர் அவர்களைத்தடுத்து நிறுத்தித் தாக்கியதுடன் அவர்களது சைக்கிள்களையும் பறித்து குளத்துள் வீசிவிட்டனராம். தாக்கியவர்கள் இராணுவச் சிப்பாய்களென்றும் அந்தச் சமயத்தில் அவர்கள் சாதாரண உடையணிந்திருந்தனரென்றும் கூறப்படுகிறது. சாரணர்களில் ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்று மன்னார் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸ் கோஷ்டியொன்று விரைந்து சென்று சாரணர்களைக்காப்பாற்றியதுடன் சைக்கிள்களையும் மீட்டுக் கொடுத்ததாம். பொலிசாரைக்கண்டதும் தாக்கியவர்கள் தப்பிச்சென்றுவிட்டனராம். பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

வங்காலை, தாழ்வுப்பாடு ஆகிய கிராமங்களில் சென்ற டிசம்பர் மாதத்தில் நிறுவப்பட்ட இரண்டு தற்காலிக பொலிஸ்நிலையங்களிலும்இப்போது பொலிசார் அதிகரிக்கப்பட்டிருக்கின்றனர்.

# யாழ். புதிய மேயர் 15-ல் தெரிவு

# நாகராஜா ராஜினாமா எதிரொலி

## கொள்கைவிளக்கப் பிரகடனமும் தேர்தல்பிரசாரத் திட்டமும்

### வேலணையில் கூடிய தமிழரசு செயற்குழு தயாரித்தது

யாழ்ப்பாணம், சனி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு நேற்று வேலணையில் கூடியபோது தேர்தல் பிரசாரத் திட்டங்கள் பற்றி ஆராய்ந்ததுடன் கொள்கைவிளக்கப்பிரகடனமும் தயாரித்தது. இம்மாதம் 17-ந் திகதி தொடக்கம் 23-ந் திகதிவரையாழ்ப்பாணக்குடாநாட்டின் பல தொகுதிகளிலும் பெரிய அளவில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதென்று செயற்குழு தீர்மானித்தது. 17-ம் திகதி நல்லூரிலும் 18-ம்திகதி காங்கேசன்துறையிலும் 19-ம் திகதி பருத்தித்துறையிலும் 20-ந் திகதி சாவகச்சேரியிலும் 21-ந்திகதிவட்டுக்கோட்டை உடுவில் தொகுதிகளிலும்: 22ந் திகதி உடுத்துறை வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களிலும் 23-ந் திகதி உடுப்பிட்டித்தொகுதியிலும் தேர்தல் பிரசாரக்கூட்டங்களை நடத்துவதென்று செயற்குழு தீர்மானித்தது.

பதினெட்டுத்தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் பெயர்கள் ஊர்ஜிதப் படுத்தப்பட்டதுடன் அடுத்த தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் பெயர்களையும் தொகுதிகளையும் இன்னும் சில தினங்களில் உத்தியோகரீதியாக தமிழரசுக்கட்சி வெளியிடும் என்று தெரிகிறது.

அடுந்த செயற்குழுக் கூட்டம் அடுத்தமாதம் 14-ம் 15-ம் திகதிகளில் உடுப்பிட்டியில் நடைபெறும். இன்று தயாரிக்கப்பட்ட கட்சியின் கொள்கைவிளக்கப் பிரகடனம் அக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பெற்றதும் வெளியிடப்படும்.

## அடுத்த மேயர் விசுவநாதனா துரையப்பாவா?







யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகரின் புதிய மேயர் தெரிவு பெரும்பாலும் இம்மாதம்

## வித்தியோதய மாணவர் கிளர்ச்சி நீடிப்பு

கொழும்பு, வெள்ளி

வித்தியோதய பல்கலைக் கழகம் தற்காலிகமாகமூடப்பட்டுள்ள போதிலும் பல்கலைக்கழகத்துக்கு வெளியே மாணவர்கள் இன்னமும் நின்றுகொண்டிருக்கின்றனர். இதேசமயம் அமைதிக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக ஆயுதந் தாங்கிய பொலிசார் அங்கு காவல் புரிகின்றனர்.

நிலைமையை ஆராய்வதற்காக பல்கலைக்கழக ரீஜன்ட் சபை இன்று கூடுகிறது.

சமீபத்தில் பல்கலைக்கழக றோயல் கமிஷன் அங்கத்தவர்கள் வித்தியோதய பல்கலைக்கழகத்துக்கு நிலைமையை நேரில் ஆராய்வதற்காக சென்றிருந்தபோது மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் அச்சமயம் கமிஷன் அங்கத்தவர்கள் தாக்கப்பட்டதும்தெரிந்ததே. இந்த ஆர்ப்பாட்டம் பற்றி நடந்த விசாரணையின் பின்னர் எட்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து விலக்கப்பட்டதுடன் மற்றும் சில மாணவர்கள் தற்காலிகமாக விரிவுரைகளிலிருந்து நிறுத்தியும் வைக்கப்பட்டனர். இதை ஆட்சேபித்து நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் பல்கலைக்கழகக் கட்டிடத்துக்கு கற்கள் வீசியும் அங்கு கிடந்த டயர்கள் மற்றும் பொருள்களுக்குத் தீவைத்தும் தாங்கள தீக்குளித்து உயிர் துறக்கப் போவதாகவும் பயமுறுத்தினர். இதைத் தொடர்ந்து அங்கு பொலிசார் அழைக்கப்பட்டனர்.

## வேலையற்றபட்டதாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூட்டங்களை நடத்துவதென்று செயற்குழு தீர்மானித்தது 17-ம் திகதி நல்லூரிலும் 18-ம்திகதி காங்கேசன்துறையிலும் 19-ம் திகதி

சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் பெயர்கள் ஊர்ஜிதப் படுத்தப்பட்டதுடன் அடுத்த

னம் அக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பெற்றதும் வெளியிடப்படும்.

காக சென்றிருந்தபோது மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் அச்சம

அங்கு பொலிசார் அழைக்கப்பட்டனர்.

டான்சானியாவில்

# வணிகத்துறை முற்றாக அரசுடைமையாகிறது

டார்எஸ்ஸலாம்,பெப் 6

ஆபிரிக்க நாடான டான்சானியாவில் வணிகத்துறையில் ஈடுபட்டுள்ள ஆஸிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு வெளியேற வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது.

டான்சானியாவில் வணிகத் துறையில் பெரும்பாலும் ஆஸியாக் காரர்களே ஈடுபட்டிருக்கிறார்கள் இந்தத் தொழில்களை முற்றாகவே அரசு பொறுப்பில் எடுத்துக் கொள்ளப்போவதாக டான்சானியா அதிபர் நைரேரி அறிவித்திருக்கிறார்.

டான்சானியாவில் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத் துறை அரசு பொறுப்பில் ஏற்றுக் கொள்வதே தமது நோக்கம் என்று அறிவித்துள்ள அதிபர் நைரேரி இந்தத் தொழில்களுள் இப்பொழுது ஈடுபட்டிருப்பவர்கள் விரும்பினால் அரசினர் வர்த்தகத்துறை கூட்டு நிறுவனங்களில் தொடர்ந்து அங்கம் வகிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

இந்தத்துறையில் பொதுவாக ஆஸியாக் காரர்களே ஈடுபட்டிருக்கிறார்கள் என்றாலும் இன வேறுபாடுகளின் அடிப்படையிலோ நிற பேத காரணமாகவோ இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென்றும் அதிபர் நைரேரி கூறியுள்ளார்.

குடும்பக்கட்டுப்பாடு

## 70 லட்சம பேர் மலடு ஆகினர்

புதுடில்லி, பெப். 6

பாரதத்தில் 1965-ம் ஆண்டிலிருந்து 69 வரை குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தின் கீழ் 70 லட்சம்பேர் மலடாகியுதுள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது.

மலடு ஆகியோ அல்லது லூப் பாவித்ததன் மூலமோ இவர்கள் பயன்பெற்றுள்ளதாக இங்கு விஜயம் செய்த குடும்பக்கட்டுப்பாட்டு ஐ. நா. குழு தெரிவித்துள்ளது. கருச்சிதைவு இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஐ. நா. குழு சிபார்சு செய்துள்ளது.

யாழ்ப்பாணம், சனி

## யாழ்ப்பாண நகரின் புதிய மேயர் தெரிவு பெரும்பாலும் இம்மாதம் 15-ந் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. திரு. நாகராஜா மேயர் பதவியை ராஜினாமாச் செய்ததால் புதிய மேயர் தெரிவு நடைபெறவிருக்கிறது.

## யாழ்ப்பாண நகர மேயர் பதவியை திரு. சி, நாகராஜா ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அடுத்த மேயர் யார் என்ற கேள்வியுடன் அடுத்த மேயராக யாரைத் தெரிவுசெய்வது என்பதற்கான முயற்சிகளும் தீவிரமாகியுள்ளன. திரு. அல்பிரட் தங்கராசா துரையப்பாதான் மேயராக வருவார் என்று அவரது ஆதரவாளர்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். அதேசமயம் திரு. ஏ. விசுவநாதன் அடுத்த மேயராக வரக்கூடுமென்ற நம்பிக்கையும் மாநகரசபை வட்டாரங்களில் நிலவுகிறது.

சுமார் ஒருவருடகாலம் யாழ்ப்பாண நகரமேயராகப் பதவிவகித்த திரு. சி. நாகராஜா சென்ற வியாழக்கிழமை பிற்பகல் 4-30 க்கு மேயர்பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் தமது ராஜிமாக் கடிதத்தை மாநகர சபை ஆணையாளரிடம் சமர்ப்பித்தார். மேயர்பதவியை அவர் ராஜினுமா செய்துவிட்டதால் அவர் மேல் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்பட மாட்டாது. முன்னுள் மேயர்களான திரு. அ. த துரையப்பா, திரு. தா. ச. துரைராஜா உட்பட பதின்மூன்கு அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டு முன்னறிவித்தல் கொடுத்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிப்பதற்காக இம்மாதம் 9-ம் திகதி சபையின் விசேஷ கூட்டத்தை ஆணையாளர் கூட்டியிருந்தார். திரு. நாகராஜா இப்போது ராஜினுமாசெய்துவிட்டதால்9-ம் திகதிநடைபெறவிருந்தகூட்டம் ரத்தாகிவிட்டது. புதிய மேயரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் அநேகமாக இம்மாதம் 15-ம்திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்றவருடம் திரு: நாகராஜாவை மேயர் பதவிக்கு தமிழ்க் காங்கிரஸ், தமிழ் அரசுக் கூட்டணி அபேட்சகராக நிறுத்திய போது எதிர்த்தரப்பினர் திரு. ஏ. விசுவநாதனைத் தங்கள்தரப்பில் நிறுத்தினர். ஒரு வாக்கினுல் அவர் தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது திரு. விசுவநாதனை மேயராக்குவதற்கு இருதரப்பிலுமுள்ள சிலர் ஆதரவுதெரிவித்துள்ளதாக மாநகரசபை வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

# வேலையற்றபட்டதாரிகள் தேர்தலில் போட்டியிடமுடிவு

யாழ்ப்பாணம், சனி

அடுத்துவரும் பொதுத் தேர்தலில் வடபகுதியிலுள்ள சகல தொகுதிகளிலும் தங்கள்சார்பில்அபேட்சகர்களை நிறுத்துவதென்று வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

பட்டதாரிகள் பிரச்னைக்குத் தீர்வுகாண தமிழ்க்கட்சிகள் தவறிவிட்டன என்பதற்காகவே அடுத்துவரும் பொதுத்தேர்தலில் தங்கள் சங்கத்தின சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதென்றும் அவர்கள் சுயேச்சையாகப் போட்டியிடுவார்கள் என்றும் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடுவதென்ற தீர்மானம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த சங்கத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அரசியல் பிரசார இயக்கத்தை மேற்கொள்வதற்கு மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற ஓர் அமைப்பை உருவாக்குவது பற்றியும் பட்டதாரிகள் சங்கம் ஆராய்ந்தது.

# மூன்று தொகுதிகளில் கம்யூனிஸ்ட் அபேட்சகர்கள்

## யாழ் நகரில் பீட்டர் கெனமன்

யாழ்ப்பாணம், சனி

அடுத்த பொதுத்தேர்தலில் வடபகுதியில் மூன்று தொகுதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு) அபேட்சகர்களை நிறுத்துவதென்று தீர்மானித்திருக்கிறது.

காங்கேசன்துறையில் திரு வி.பொன்னம்பலமும், உடுப்பிட்டித்தொகுதியில் திரு. பி. குமாரசாமியும், கோப்பாயில் திரு. எம்.ஸி சுப்பிரமணியமும் போட்டியிடுவர்.

கம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமனும், திரு.ஏ.ஜி,எஸ். இரத்தினவீராவும் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ்ப்பாணமாவட்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்தியதுடன் பொதுத்தேர்தலில் எந்தெந்தத் தொகுதிகளில் யார்யாரை அபேட்சகர்களாக நிறுத்துவதென்பதுபற்றியும் பரிசீலனை செய்தனர். இதன்பின் மேற்கண்டமூன்று தொகுதிகளிலும் மேற்குறிப்பிட்ட மூவரையும் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்களாக நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை,வட்டுக் கோட்டை ஆகியதொகுதிகளில் தங்களுக்கு ஆதரவு தருமாறு சிலர் விடுத்த கோரிக்கைபற்றியும் ஆராயப்பட்டது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தூதுக்குழு வொன்றையும் திரு கெனமனும் திரு.ரத்தினவீராவும் சந்தித்துப் பேசினர் வேலையற்ற பட்டதாரிகள் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சியிடம் நல்ல திட்டங்களிருப்பதாகவும் இப்பிரச்னையை தென்னிலங்கையிலுள்ள பட்டதாரிகளின் பிரச்னையுடன் சேர்த்து ஒன்ருகக்கருத வேண்டுமென்றும் அவர்கள் தூதுக்குழுவினரிடம் கூறினர்- இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு அடுத்த தேர்த

(4-ம் பக்கம் பார்க்க)

# ஆழ்கடலில் பெண்சடலம்: படகுச் சாரதிமீட்டுவந்தார்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவுக் கடலில் இனந்தெரியாத ஒரு பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்குப் பிரயாணிகளை ஏற்றிவந்த 'எலாரா' என்ற மோட்டார் படகு இச்சடலத்தைக் கண்டு எடுத்துக்கரை சேர்த்தது.

பலத்த காற்றுக்கும் அலைகளுக்குமிடையே ஆழ்கடலில் படகை ஓட்டிவந்த சாரதியான நெடுந்தீவைச் சேர்ந்த ரி.ஜே. தனிநாயகம் (சின்னத்தம்பி) சடலமொன்று மிதந்துவருவதைக்கண்டு மிக்கசிரமத்துடன் படகைச் சடலம் மிதந்துவந்த திசைக்குத் திருப்பி சடலத்தைத் தூக்கிப் படகில் ஏற்றினர். சடலம் பழுதடைந்திருந்தாலும் பிரமாண்டமான அலைகளினுலும் சடலத்தைத் தூக்குவதில் பலத்தசிரமமேற்பட்டது.

சடலம் குறிகாட்டுவான் கரையில் சேர்க்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை சடலம் இனங்கண்டுகொள்ளப் படாததுடன் மரணத்திற்கான காரணமும் தெரியவில்லை. இப்பெண்ணுக்குச் சுமார் 40 வயது இருக்கலாமென மதிப்பிடப்பட்டது.

## பிரான்சிய பத்திரிகையாளர் இங்குவருகிறர்

கோட்டை, வெள்ளி

பிரான்ஸின் பிரதான பத்திரிகையான 'பிரான்ஸ் சொயர்' பத்திரிகையின் வெளிநாட்டு ஆசிரியரான திரு மோரிஸ்டீலார் நாளை இங்கு வருகிறர்.

"தமிழர் விஷயத்தில்

# சுதந்திரக் கட்சியும் யு என். பி.யும் ஒரேவழியில் தான் செல்கின்றன"

— அமிர்தலிங்கம் எம். பி,

கோப்பாய், வெள்ளி

"இலங்கையில் இன்று சிங்களம் மட்டும் சட்டம் அரசாங்கத் திட்டப்படி பூரண அமுலாக்கப்படாதிருப்பதற்குக் காரணம் தமிழரசுக்கட்சியின் இடைவிடாத போராட்டமேயாகும். தமிழரசுக்கட்சியினர் தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்பது பொய்ப் பிரசாரம். அத்தகைய பிரசாரங்களில் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது."

மேற்கண்டவாறு கோப்பாய் மாவட்டத் தமிழரசுக் கட்சி வாலிபமுன்னணியால் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சிச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினுர்.

பருத்தித்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

பெரும்பான்மை மக்களின் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், யூ. என். பி.யும் தமிழர்கள் விஷயத்தில் இன்று ஒரே வழியிலேயே செல்கின்றன என்பதைத் தமிழ்பேசும் மக்கள் உணர்ந்துவிட்டனர். தற்பொழுது இலங்கையில் பெயரளவில் மாத்திரமே சோஷலிஸம் நிலவுகிறது. சகல துறைகளிலும் சிங்களத்தைப் பரப்புவதிலேயே தான் அவர்கள் சோஷலிஸம் தங்கியுள்ளது. இனத்தை இனம் அடக்கி ஒடுக்குவதிலும் வகுப்புவாத அடிப்படையிலும் சோஷலிஸம் எந்த ஒரு தேசத்திலும் நிலைபெறமுடியாது. தமிழ்மொழி விசேஷ உரிமைச் சட்டத்தைச் சட்டபூர்வமாக ஏற்படுத்தியும் அதனை நடைமுறையில் அமுல்நடத்தாத காரணத்தாலேயும், யு. என். பி. அரசாங்கம் ஆரம்பத்தில் எமக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமையாலுமே நாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறினேம்."

மாவட்டசபை குறித்து அவர் மேலும் பேசுகையில் "ஏகாதிபத்தியத்தின் அமைப்பாகிய கச்சேரி முறை அமைப்பு ஒழிந்து ஜனநாயகம் வளரவேண்டுமாயின் ஒரு காலத்தில் மாவட்டசபைகள் அமைத்தேயாகவேண்டும். இதர தமிழ்க்கட்சிகள் மாவட்ட சபை அமைப்பை ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருந்தன. ஆனுல் சந்தர்ப்பவாதம் அவர்களை இன்று மாவட்டசபையை எதிர்க்கச்செய்கிறது, இதுகுறித்துச் சிங்கள வகுப்புவாதிகளால் தமிழர்களுக்கு எதிராகத் தென்னிலங்கையில் செய்யப்பட்டுவரும் பிரசாரம் கண்டிப்பாக மாறியே தீரும்" என்ருர்.

பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்படுவதை எமது கட்சி என்றும் எதிர்த்தே தீருமெனவும், அடையாள அட்டை மசோதாவால் தமிழ்மக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமார்களென கட்டாய நாடுகடத்தலுக்கு தமிழரசுக்கட்சி என்றும் இடமளியாதென்றும் அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. துரைரத்தினம் பேசுகையில் நம்முள் சமத்துவத்தை நிலைநாட்டி ஒரு பகுதியினருக்குச் சுதந்திரம் கொடுக்கமுடியாதவர்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதில் அர்த்தமில்லையென்றும், சாதிப் பிரச்சினையே பொருளாதார அபிவிருத்தியை மந்தமாக்கிவருகிறதென்றும், காலத்துக்கேற்ற வகையில் சமூகமும் கருத்தும் மாறுதல் அவசியமென்றும் சொன்னர்.

# ஜப்பானியப்பெண்களை நமது தாய்மார்பின்பற்ற வேண்டும்

மல்லாம், வெள்ளி

"தேசிய அரசாங்கம் நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைபெறவைத்ததுடன் விவசாய கைத்தொழில் திட்டங்கள் மூலம் பொருளாதார ரீதியில் நாட்டின் சுபிட்சத்திற்குத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் புதன் கிழமை இரவு நடைபெற்ற வலி. வடக்கு காரியாதிகாரி பிரிவின் இலங்கை சுதந்திர தினவிழாவுக்கு தலைமை வகித்துப்பேசும்போது காரியாதிகாரி திரு பி. எல்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பெருந்தீ

கெய்ரோ, பெப். 6

ஐக்கிய அரபுக்குடியரசு நகர்களில் ஒன்ருன அலெக்ஸாண்டிரியாவில் எண்ணெய்க் குதமொன்றில் தீப்பிடித்துப் பரவிக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தீயை அணைப்பதற்கு 25 தீயணைக்கும் எஞ்சின்கள் ஈடுபட்டிருக்கின்றன. தீ பிடித்ததற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. இப்பெருந் தீ மற்றப் பகுதிகளுக்கும் பரவலாமென்று அஞ்சப்படுகிறது.

## 8 பேர் பலி

புதுடில்லி, பெப்.6

அஸ்ஸாமில் சாதிய என்ற இடத்தில் மோட்டார் வாகனம் ஒன்று ஆற்றில் வீழ்ந்ததில் 8 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்


**வாடகைக்கு**

350 சதுர அடி ஸ்டான்லி வீதியில் சகல வசதிகளுடன் மேல்மாடியில் ஆபீசுக்கு உகந்தது. விபரங்களுக்கு: 320, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1651

**விற்பனைக்கு**

கார்:

சி. என். இலக்கத் தொடர் A. 40 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கருணப்பிரவாசா, வதிரி, கரவெட்டி. 1820

**அடைவு நகைகள் ஏலவிற்பனவு விளம்பரம்**

தொல்புரம் இ. துரையப்பா & சன்ஸ் அடைவு கடையில் 13-1-1968 தொடக்கம் 31-12-1968 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 12-3-70 வியாழக்கிழமை மு. ப. 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

சி. செ. மாரிமுத்து,
Commissioner, Auctioneer & Valuer.

விதானை வளவு,
சித்தன்கேணி,
7-2-70. 1941

திருச்சிற்றம்பலம்

**அந்தியேட்டியும், சபிண்டீகரணமும்**

அன்புடையீர்!

நிகழும் சௌமிய வருஷம் மார்கழித் திங்கள் 25-ம் நாள் (9-1-1970) வெள்ளிக்கிழமை இறைவனடி ஏகிய

எனதருமைக் கணவர்

நீர்வேலி உயர்திரு க.வே.கனகரத்தினம் J.P. அவர்களின்

அந்தியேட்டிக்கிரிகை 8-2-1970 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குக் கீரிமலையில் நடைபெறும்.

9-2-1970 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் சபிண்டீகரணமும் அன்று மாலை 5 மணிக்கு அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஓர் கூட்டுப்பிரார்த்தனையும் எமது இல்லத்தில் நடைபெறும்.

மேற்படி வைபவங்களில் தங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்,
திருமதி வி. கனகரத்தினம்

அவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்
வே. உமாபதி, உ. கந்தசாமி, க. கிருபாகரன்,
'இரத்தின மாளிகை', நீர்வேலி. 1483


# சுவிட்ஸர்லாந்து வீரர்களை இலங்கை கோஷ்டி தோற்கடிக்குமா?

## இலங்கையருக்குக் கடும் பயிற்சி; போட்டி இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த ''ஸிலீரன்'' விளையாட்டுக் கழக உதைபந்தாட்டக் கோஷ்டி இன்று இலங்கைக்கு வருகின்றது.

இக் கோஷ்டி நாளை மாலை 7 மணிக்கு இலங்கை உதைபந்தாட்ட தலைவர் தெரிவுக் கோஷ்டியுடன் சுகததாச விளையாட்டரங்கில் மின்னொளியில் ஓர் சிநேகபூர்வமான போட்டியில் கலந்து கொள்ளும்.

'ஸிலீரன்' விளையாட்டுக் கழகம், சுவிட்ஸர்லாந்தில் பெரும் புகழ் பெற்ற ஒரு விளையாட்டுக் கழகம் மட்டுமின்றி, ஐரோப்பாவிலேயே மிகவும் பிரசித்தி பெற்று விளங்கும் கழகமுமாகும். இக் கழகத்தில், சுவிட்ஸர்லாந்து தேசியக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் ஐந்து பிரசித்தி பெற்ற வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர். இக்கோஷ்டியின் காப்டனுன வீரர் சிஸ் யூஜின் தான் சுவிட்ஸர்லாந்து தேசியக் கோஷ்டிக்கும் காப்டனுக இருக்கின்ருர். இக் கோஷ்டியில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வீரர் இருவரும், இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரர் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

'ஸிலீரன்' கழகம் ஹொங்கொங், ஈரான், தாய்லாந்து இந்தியா ஆகிய நாடுகளின் தேசியக் கோஷ்டிகளை வெற்றி வாகை சூடியது குறிப்பிடத்தக்கது.

இக் கோஷ்டியுடன் மோதுவதற்குப் பலம் கொண்ட கோஷ்டி ஒன்றை உருவாக்குவதற்காக, இலங்கையின் ஏனைய பாகங்களிலுமிருந்து 39 வீரர்களைத் தெரிவு செய்து, கொழும்பில் கடும் பயிற்சி அளிக்கப்பட்டு வந்ததாக, இலங்கை உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. வி. கே. ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

சுவீட்ஸர்லாந்து 'ஸிலீரன்' கோஷ்டிக்கும், இலங்கைக் கோஷ்டிக்குமிடையில் சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறும் இப் போட்டிக்கு, இலங்கை கிரிக்கெட் சங்கத் தலைவர் திரு. டுெபேட் சேனநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிருர்.

இக் கோஷ்டி இலங்கை வருவதற்கான சகல ஏற்பாடுகளையும், இலங்கை உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. வி. கே. ஆறுமுகமே செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (தே. நி)

## பேராதனை கோஷ்டி வென்றது

மாவிட்டபுரம், வெள்ளி

யாழ் பாடசாலை தெரிவுக்கோஷ்டியை வென்றது பேராதனைப் பல்கலைக்கழக கோஷ்டி.

யாழ் பாடசாலை உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி பேராதனைப் பல்கலைக்கழக கோஷ்டியுடன் மோதிக்கொண்ட இவ்விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டி சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இடைவேளைக்குமுன் நடைபெற்ற போட்டியில் பல்கலைக்கழகக் கோஷ்டியைச் சேர்ந்த ஜேக்கப் இருகோல்களைப் போட்டார்: யாழ் கோஷ்டியைச் சேர்ந்த ஸ்கந்தா வீரர் காங்கேஸ்வரன் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது 2—1 என்ற எண்ணிக்கையில் பல்கலைக்கழக கோஷ்டி முன்னணியில் திகழ்ந்தது.

இடைவேளைக்குப் பின் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தபோது யாழ். கோஷ்டியினரின் பல கோல் போடும் சந்தர்ப்பங்களை எதிர்க்கோஷ்டியின் வீரர்கள் முறியடித்தனர் யாழ் கோஷ்டி முன்னனி வீரர் மிகவும் சாதுரியமாக விளையாடியும்கோல் போடமுடியவில்லை.

## நாடகப் போட்டியில் பரிசுபெற்ற பாடசாலைகள்

மாவிட்டபுரம், வெள்ளி

அகில இலங்கை ரீதியில் கலைக்கழகஆதரவில் வருடாவருடம் நடாத்தப்படும் பாடசாலை நாடகப்போட்டிகளின் 7 ஆவது ஆண்டுப் போட்டிகள் மாகாஜனக் கல்லூரியில் நடைபெற்றன.

6 பாடசாலைகள் பங்கு கொண்டன. வரலாற்று நாடகம், சமூகநாடகம், நாட்டுக்கூத்து என மூன்று பிரிவாக போட்டி நடாத்தப்பட்டது.

வரலாற்று நாடகத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினர் நடித்த ''குருதட்சனை'' முதல் இடத்தைப் பெற்றது. கீரிமலை நகுலேஸ்வராவித்தியாலயத்தின் 'கலையால் அழிந்த கர்வம்' 2ம் இடத்தையும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் 'தந்தையின் ஆணை' மூன்ரும் இடத்தையிம் பெற்றன.

நாட்டுக் கூத்தில் முருங்கன் மகாவித்தியாலயம்

இப் போட்டிகளுக்கு கலையரசுச் சொர்ணலிங்கம், திரு. சண்முகநாதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

## நுகர் பொருள்களின் விலை அதிகரிக்கின்றது

கோட்டை, வெள்ளி

...பசை, சவர்க்காரம், கிறீம் சோடா தூள்போன்ற பல நுகர் பொருள்களின்

கிளிநொச்சியில்

## ஆரோகணம் சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி காரியாதிகாரிப் பிரிவினுல் நடாத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கிளிநொச்சி ஆரோகணம் விளையாட்டுக் கழகம் சாம்பியனுக வந்துள்ளது.

ஆரோகணம் விளையாட்டுக் கழகத்துக்கும், விவசாயப் பாடசாலை கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆரோகணம் கோஷ்டி மிகவும் சாதுரியமாக விளையாடி விவசாயக்கோஷ்டியை 4-2 கோல்களால் தோற்கடித்துசாம்பியனுகியது.

இப்போட்டி கிளிநொச்சி ரேட்டறி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

மகாவலி திட்டம்

## 5 வருடத்தில் கடனை தீர்க்கும்

அனுராதபுரம், வெள்ளி

மகாவலி திருப்புத் திட்டத்திற்குச் செலவாகும் பணத்தை அது ஐந்தரை வருட காலப் பகுதிக்குள் திருப்பித் தந்துவிடும் எனச் சிறந்த பொருளியல் வல்லுனர்கள் கூறுகிருர்கள். ஆனுல் அரசியல் எதிரிகள் இத்திட்டத்திற்காக கடன் பெறும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க பல ஆண்டுகள் ஆகும் எனக் கூறுகிருர்கள்.

கடந்த வாரம் ஹொறவப்பொத்தானை தொகுதியில் புதிய பாலமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பீ. டி. சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

## 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கோட்டை, வெள்ளி

வீடமைப்பு, விவசாயம் ஆகியனசம்பந்தமாக மதிப்பெடுப்பதற்கு அரசாங்கம் 80 லட்சம் ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.

வீடமைப்புக் கணக்கெடுப்பு 1971 ம் ஆண்டிலும், விவசாயக் கணக்கெடுப்பு அதற்கு அடுத்த ஆண்டிலும் நடைபெறவிருக்கிறது.

நிதியமைச்சர் திரு. பி. வன்னிநாயக்காவுக்கு மந்திரிசபைபலதடவை சிபார்சு செய்ததைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கைமேற்கொள்ளப்பட விருக்கிறது. இக்கணக்கெடுப்பு வேலைகளை மேற்கொள்ளுவதற்கு 50,000 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## திரிபீடகம் மொழிபெயர்க்க] சபை

கோட்டை, வெள்ளி

திரிபீடகத்தைச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்கு அரசாங்கம் தனிச் சபையொன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளது. கலாச்சார இலாகா அதிபர் திரு ஹேமசிறி பிரேமவர்த்தனு திரிபீடத்தை மொழிபெயர்க்க வேண்டுமென அரசரங்கத்தைக் கேட்டுக்கொண்டதை முன்னிட்டே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

இதற்கான மசோதாவொன்றும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவில் பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்கப் படுமெனவும் தெரிகிறது.

திருமலை

## வலி. கிழக்கு ச.ச.நி. சமாஜ விளையாட்டுப் போட்டி முடிவு

கோப்பாய், வெள்ளி

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி. கிழக்கு காரியாதிகாரி பிரிவில் நடைபெற்ற சனசமூக நிலைய சமாஜ விளையாட்டுப் போட்டிகளில் வெற்றுபெற்ரேர் விபரம் வருமாறு:

தனிப்பாடல்: குருநகர் புனித ஆரோக்கியநாதர் சனசமூகநிலையம், தாவடி மத்திய சனசமூகநிலையம், ஆவரங்கால் சர்வோதய சனசமூகநிலையம்.

கூட்டுப்பாடல்: நல்லூர் மங்கையர் கழகம், கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம், கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூகநிலையம்.

வில்லுப்பாட்டு: தாவடி மத்திய சனசமூகநிலையம், யோகாசனம்: குருநகர் றெக்ளமேசன் சனசமூகநிலையம்.

கிராமிய நடனம்: கோண்டாவில் வடக்கு சனசமூக நிலையம். கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம்

வாத்தியஇசை: ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையம்.

கோலாட்டம்: நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையம்.

நாடகப்போட்டி: நல்லூர் சனசக்தி சனசமூகநிலையம், புத்தூர் மகாத்மா காந்தி சனசமூக நிலையம், கோண்டாவில் வேதபாராயண சனசமூகநிலையம், புத்தூர் மகாத்மாஜி சனசமூக நிலையம்.

உள்ளூராட்சி ஆய்வு உத்தியோகத்தர் வர்ணகுலசிங்கம் போட்டிகளுக்கு மத்தி

தூர், ஏ. மயில்வாகனம் ஞானபாஸ்கரோதய சனசமூகநிலையம் கல்வியங்காடு, கே. ராசலிங்கம் உடற்பயிற்சிக்கழகம் இருபாலை, சி. இராஜமணி கலைமணி சனசமூகநிலையம்கட்டப்பிராய்.

வெற்றிபெற்ரேருக்கு காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை பரிசுகளை வழங்கினுர்.

## 'வாடகையை குறைக்கவும்'

கோப்பாய், வெள்ளி

''அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியேற்றத் திட்ட வீடுகளின் வாடகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் கோரியுள்ளார்.

மேற்படி திட்டத்திலுள்ள நீர்த் தட்டுப்பாடு பற்றியும் அமைச்சருக்கு அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

## சிரமதானம் செய்வர்

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் கிராமசபையால் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடாத்தப்படவிருக்கும் தொழில் மகத்துவத்தினத்தன்று காலை முதல் கோப்பாய் ... ரோதய ... தாரின் விளையாட்டுத் திட...

## பற்றுக்குறை இல்லை

கோட்டை, வெள்ளி

இவ்வருடம் இதுவரை இலங்கை கண்தான சங்கத்தின் 26 அங்கத்தவர்கள் தங்கள் கண்களை தானம் செய்துள்ளார்கள். இதில் 7சோடி கண்கள் கொழும்பு கண்ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டுள்ளன. மற்ற கண்கள் சர்வதேச கண் வங்கியினுல் சேகரிக்கப்பட்டு கண் ஆஸ்பத்திரிக்கும் மற்றும் அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும்கொடுக்கப்பட்டன.

இவ்வாறு 'கண்கள் பற்றுக்குறைஇல்லை' என்றதலைப்பில் இலங்கை கண்தான சங்கத்தின் பொதுமக்கள் தொடர்பதிகாரி டாக்டர் ஹட்சன் பத்திரிகைகளுக்கு அளித்த கருத்தில் தெரிவித்துள்ளார்.

தேவைபோக மேலதிகமானகண்கள்யாவும் சிங்கப்பூர், புதுடில்லி, சென்னை, கராச்சி ஆகிய இடங்களுக்கு அன்பளிப்பாகஅனுப்பிவைக்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார் இலங்கைசர்வதேச கண் வங்கியினுல் பிற நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள கண்களின் எண்ணிக்கை தற்போது 457 ஆக அதிகரித்துள்ளது.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
**பச்சை விளக்கு**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
எ. ஜி. ஆர்.
நடித்த
**குடும்பத் தலைவன்**

**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
**அடிமைப் பெண்**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கே. பி. சுந்தராம்பாள் - ஜெமினிகணேசன்
மற்றும் பலர் நடித்த
**ஒளவையார்**
(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யில் புதிய பாலமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் பொருளியலாளர்கள் மகாவலி திருப்புத் திட்டம் சம்பந்தமாக தயாரித்து அரசாங்கத்துக்கு அளித்த அறிக்கையை நாங்கள் அச்சிட்டுப் பொதுமக்களுக்கு விரைவில் அளிக்கவிருக்கிறோம். மகாவலிகங்கையைத் திருப்பும் எண்ணம் எனக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல நான் வடமத்திய மாகாணத்தின் அரசாங்க அதிபராகவிருந்த காலத்திலேயே இருந்தது எனவும் குறிப்பிட்டார்.

—

## மாசி மகத் திருவிழா

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் மாசிமகத் திருவிழா இம்மாதம் 21-ந் திகதி நடைபெறும் இதைமுன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

வெகுவிரைவில் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப் படுமெனவும் தெரிகிறது.

—

திருமலை

## சென். ஜோசப் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். ஜோசப் கல்லூரி மிகவும் திறமையாக விளையாடி சென். பற்றிக்ஸ் கல்லூரியை 6-0 கோல்களால் தோற்கடித்தது.

### கூடைப்பந்தாட்டம்

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியிலும், திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரி 63—53 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப் போட்டிகள் யாவும் திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(தே. நி)

யண சனசமூகநிலையம், புத்தூர் மகாத்மாஜி சனசமூக நிலையம்.

உள்ளூராட்சி ஆய்வு உத்தியோகத்தர் வர்ணகுலசிங்கம் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## சுதந்திர தின போட்டிமுடிவுகள்

சுதந்திரதினத்தையொட்டி வலிகிழக்கு காரியாதிகாரி பகுதியினரால் நடாத்தப்பட்ட சைக்கிள்ஓட்டம், மரதன்ஓட்டம் ஆகியவற்றில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு: வலிகிழக்கு காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை சுதந்திர தினக் கொடியை ஏற்றி வைத்துப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

### சைக்கிள் ஓட்டம்

ஆர். இரத்தினம், ஸ்ரீகுமர குருபரன் சனசமூகநிலையம், புத்தூர்; ஆர். யோகராசா நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் அச்சுவேலி; என். சிவலிங்கம், ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் புத்தூர்; எஸ். மயில்வாகனம், என். றிச்சேட், கே. சின்னராசா.

### மரதன் ஓட்டம்

எஸ் தங்கராசா, கணேச விளையாட்டுக்கழகம் நீர்வேலி; வி. தர்மதாஸ் புத்

நடாத்தப்பட்டவிருக்கும் தொழில் மகத்துவத்திலைத்தன்று காலை முதல் கோப்பாய் தெற்கு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தாரின் விளையாட்டுத் திடலில் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவிகள் சிரமதானம் செய்ய முன் வந்துள்ளனர்.

— —

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இலட்சார்ச்சனைவரும் 11-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் தொடர்ந்து பத்துத் தினங்கள் கடைசி தினத்தன்று சுவாமி சுழிபுரம் திருவடி நிலையத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறுவதற்காக கொண்டு செல்லப்படும்.

நுகர் பொருள்களின் விலை அதிகரிக்கின்றது!

கோட்டை, வெள்ளி

பற்பசை, சவர்க்காரம், கிறீம் சோடா நூல்போன்ற பல நுகர் பொருள்களின் விலை வரவர அதிகரித்துக் கொண்டுவருவதாக மக்கள் புகார்செய்கின்றனர்.

ஒவ்வொரு பொருள்களினதும் விலையும் 10 அல்லது 15 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது: இரு பிரபல சவர்க்கார உற்பத்தியாளர்கள் மேலும் தங்கள் உற்பத்திப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கவுள்ளதாகக்கூறப்படுகிறது. 'பிக்ஸ்' காரணமாக உற்பத்திக்கு அதிக பணம் செலவாகிறதால் அப்பொருளகளின் விலையையும் அதிகரிக்கவேண்டியுளளதாக உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

2ம் இடத்தையும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் 'தந்தையின் ஆணை' மூன்றும் இடத்தையிம் பெற்றன.

நாட்டுக் கூத்தில் முருங்கன் மகாவித்தியாலயம் வெற்றியீட்டியது.

சமூகநாடகத்தில் இளவாலை சென் என்றிக்கல்லூரியினர் நடித்த 'பாசமே வெல்லும்' என்னும் நாடகம்முதல் இடத்தைப் பெற்றது.

சிறந்த நடிகராக மகாஜனக் கல்லூரியினரின் 'குருதட்சனை' நாடகத்தில் நடித்த எஸ் சுப்பிரமணியம் தெரிவு செய்யப் பட்டார். மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 'பண்டாரவன்னியன்' நாடகத்தில் பண்டாரவன்னியனாக நடித்தவர் 2வது சிறந்த நடிகரானார்.

வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் வடபிரதேச கல்வி அதிகாரி திருமதி ஆர், எஸ். பாமர் பரிசில்களையும், தங்கப் பதக்கங்களையும் வழங்கினார்.

# இன்றைய பலன்

தைமாதம் 25-ம் திகதி [7-2-70]

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- உணர்ச்சிமயமான தினம். மனப்போராட்டங்கள் நடைபெறும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். குடும்பதில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்.

**ரிஷபம்**- நல்லதைச் செய்வீர்கள். நலன்பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல்வாதிகள் அதிர்ஷ்டதேவதைகளை அணைத்துக்கொள்வர்.

**மிதுனம்**- இலக்கியரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடக கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

**கடகம்**- வெளியிடத்து பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தை பேணவும் வாட்டிடும் பிணியும் தானே.

**சிம்மம்**- இல்லத்தில் இனிமை வளரும். உறவினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

**கன்னி**- எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும், நண்பர்களும் காலை வாரிவிடககூடும் நிதானம்வேண்டும்.

**துலாம்**- தந்தைவழி ஆதரவு தவறாமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் தவிடுபொடி தனிக்கொடி பறக்கும்.

**விருச்சிகம்**- தங்கக்குணம் மேலிடும். தக்கமதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பலனும் உற்சாகமாகமும் பிறக்கும்.

**தனுசு**- கைநிறையப்பணம் தாராளமாகக் கிடைக்கும். புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடிவருவவார்கள். தொழில்துறையில் இடமாற்றத்திற்கும் இடம் உண்டு. வெளியூர்பயணமும் ஏற்படலாம்.

**மகரம்**- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடம்உண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணத்தை பின்போடுவது விரும்பத்தக்கது.

**கும்பம்**- ஆத்திரப்படுவதால் நண்பர்களை பகைத்துக்கொள்ளுவீர்கள். எழுத்துமூலம் தொடர்புகொள்வதை இன்று தவிர்த்துக்கொள்ளவும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படக்கூடும்.

**மீனம்**- பணமுடைதீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.


உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

0231

ஏ. எப். ரேமண்ட்ஸ்

ஈமக் கிரியை எற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏ எப் ரேமண்ட்ஸ்

இன்று மட்டும்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00

ஆஷாபரேக் - ஹெலன் நடித்த

ஷிக்கார்

அத்துடன் 1968-ம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

வல்வெட்டித்துறை

றஞ்சனா தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

போயா பிரிபோயா 2-30

ஜெமினி—ஈ.வி சரோஜா நடித்த

பாக்கியலக்ஷ்மி

4-30 only

LEGIONS LATS PETROL

MANOHARA JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m

TARZAN AND THE JUNGLE BOY

(Color & Scope)

டார்ஸனும் காட்டுப் பையனும்

REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m.

Rory Calhoun & Lea Massari in

THE COLOSSUS OF THE RHODES

(Dastman color-Cinemascope)

மற்றும் பலர் நடித்த

ஔவையார்

(புதிய கொப்பி)

தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

★ சத்தியன் ★ ஷீலா நடித்த

ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்

செம்மீன்

(மலையாளம்)

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

வெகுவிரைவில்

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று "பேசும்படத்தின்" மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்

(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி) (3) சிறந்த உபநடிகர் (பாலையா)

நாதஸ்வர இசை: மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்





சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா

நாகேஷ்

நம்பியார்

ஏ.வி.எம். ராஜன்

மனோரமா

மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்

தில்லானா மோகனாம்பாள்

ஈஸ்ட்மென் கலர்

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் A.P. நாகராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காசிய நிலைமை: ரஷ்யாவுக்கு மேற்கு வல்லரசுகள் பதில்

## அமைதிக்கு கூட்டு முயற்சி செய்ய வலியுறுத்தல்

## எகிப்துக்கு சோவியத் ஆயுதங்கள்

### தாக்குதல் நிற்காது என்கிறது இஸ்ரேல்

நியுயோர்க், பெப். 6

மேற்காஸிய நிலைமை மோசமாகிக் கொண்டுவருவது பற்றி சோவியத் யூனியன் கவலை தெரிவித்து அனுப்பிய செய்திக்கு மேற்கத்திய வல்லரசுகள் பதில் அனுப்பிவிட்டன.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் கொடுப்பதை நிறுத்திவிட விரும்பாவிட்டாலும், மேற்காசியாவில் ஆயுதங்கள் கட்டுப்படுத்தப்படுவதை அமெரிக்கா ஆதரித்திருப்பதாகத் தெரிகின்றது.

மேற்காஸிய நெருக்கடிக்கமைதித்தீர்வு காண் பதில் வல்லரசு நாடுகள் தொடர்ந்து கூட்டு முயற்சி செய்ய வேண்டுமென்பதை அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜினுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறாராம். இக்கருத்தையே பிரிட்டனும் வலியுறுத்தியிருப்பதாகத் தெரிகின்றது. திரு. கோஸிஜின் மேற்காஸிய நிலைமை குறித்து எழுதிய கடிதத்திற்குத் தாம் ஏற்கனவே பதில் அனுப்பிவிட்டதாக பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் அறிவித்திருக்கிறார். ஆனால் அது பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

பிரான்ஸ் அனுப்பியுள்ள பதிலில் ஆயுத வினியோகத்தை ஆட்சேபிக்காவிட்டாலும் மேற்காஸிய விஷயத்தில் பாதுகாப்புச்சபை கடுமையான நடவடிக்கை எடுத்து அமைதியை நிலைநாட்ட...

இதற்கிடையில் சோவியத் யூனியன் ஐக்கிய அரபுக் குடியரசுக்குப் பெருவாரியான நவீன ரக ஆயுதங்களை விமான மூலம் அனுப்பத் தொடங்கிவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன

**யுதாண்ட்**

மேற்காஸிய நாடுகளுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதை ஐ. நா. தடைவிதிப்பது குறித்து பொதுக்காரியதரிசி யுதாண்ட் சாதகமான கருத்துக்கொண்டிருப்பதாகவும் ஆனால் இதற்குச் சம்பந்தப்பட்ட நாடுகள் இணங்கிவரவேண்டும் என்று அவர் கருதுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

**நேற்றைய சண்டை**

நேற்று சூயஸ்கால்வாயின் கிழக்குப் பிரதேசத்தில் எகிப்திய கொமாண்டோக்கள் இஸ்ரேலிய நிலைகள் மீது பதுங்கியிருந்து திடீர்த் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலியர் கூறினார்கள். இதில் நான்கு இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேலிய டாங்கிகளையும் ராணுவ மோட்டார்களையும் துவம்சம்செய்துவிட்டுத் தமது படைகள் பத்திரமாகத் தமது முகாம்களுக்குத் திரும்பிவிட்டதாக எகிப்தியர் கூறினர், அப்பகுதியில் எகிப்தியரின் ராணுவப்படை நிலைகளைத் தமது விமானப்படையினர் குண்டு வீசி மூழ்கடித்ததாகவும் குறைந்தது ஐந்து எகிப்தியர் இதில் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேலியர் அறிவித்தனர்

**ஜோர்டான் மன்னர் ஆலோசனை**

ஜோர்டான் மன்னர் ஹுசெயின் நேற்று ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் கேணல் அப்துல் நாஸருடன் கெய்ரோவில்சுமார் இரண்டு மணி நேரம் ஆலோசனைகள் நடத்தினார். இஸ்ரேலுடன் நேரடியாகப் பகைமை பூண்டிருக்கும் அரபுநாடுகளின் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்று நாளைய தினம் நடைபெறுவதையொட்டி இவர்கள் ஆலோசனைகள் நடத்தியதாகத் தெரிகின்றது.

கெய்ரோவில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற சர்வதேசஆட்சிமன்ற உறுப்பினர்களின் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் மோசமாகிவரும் மேற்காஸிய நிலைமை குறித்துக் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

மேற்காஸியாவில் அமைதியை நிலைநாட்ட உலக நாடுகள் உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

## அங்குய்லாவில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

லண்டன், பெப். 6

பிரிட்டிஷ் காலனி நாடான அங்குய்லா தீவில் மீண்டும் சுதேசிகள் ஆர்ப்பாட்டம் நடத்த ஆரம்பித்திருக்கின்றனர். இத்தீவிலுள்ள அரசாங்க நிர்வாகக் கட்டிடத்தின் மீது கற்களையும் பொல்லுகளையும் வீசி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த வருடம் இங்கு சுதேசிகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தபோது பிரிட்டன் படைகளை அனுப்பி ஆர்ப்பாட்டங்களை அடக்கியது. பிரிட்டிஷ் படைகள் அங்கிருந்து வெளியேறிய பிறகு இப்பொழுது முதல் தடவையாக மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

அங்குய்லாவில் புதிய ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கானவழிமுறைகளை கண்டறிவதற்காக ஒரு கமிஷனைபிரிட்டன்நியமித்திருக்கின்றது.

## விசாரணை நடத்த ஐ. ஜி. பி. உத்தரவு

கொழும்பு, வெள்ளி

காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திர தினவிழாவின் போது முப்படைகள் அணிவகுப்பை படம்பிடிக்கச்சென்ற பத்திரிகைப் படப்பிடிப்பாளர் பொலிஸ் உத்தியோகத்தரால் விரட்டப்பட்டதாகக் கூறப்படும் புகார் பற்றிவிசாரணை செய்யும்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவிட்டுள்ளார்:

அணிவகுப்பைப் படம் பிடிக்கச்சென்ற பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களைப் படம் பிடிக்கவிடாது வெளியே செல்லும்படிகூறியதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. (சி. பி. ஏ)

**தாய்மார்களுக்கு**

## பயிற்சி வகுப்புகள் நடத்த சுகாதார அமைச்சு தீர்மானம்

கோட்டை, வெள்ளி

நாட்டிலுள்ள சகல கர்ப்பிணிகளுக்கும் குழந்தை வளர்ப்பு சம்பந்தமான நவீன முறைகளைக் கற்றுக் கொடுக்கச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது

குழந்தைகளை நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாக வளர்க்கும் அறிவாற்றல் இலங்கைத் தாய்மார்க்குக்...

இப்பயிற்சி வகுப்புகள் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சிகிச்சை நிலையங்களில் சௌக்கிய இலாகா அதிகாரிகளால் நடாத்தப்படவிருக்கிறது.

## யாழ். மாவட்ட [illegible]ச. நிலைய விழா

யாழ்ப்பாணம், சனி

## டூப் செக்கை

## அண்ணா நினைவு விழா

உடுப்பிட்டி வெள்ளி

உடுப்பிட்டி தமிழின முன்னேற்றக் கழகத்தினர் எதிர்வரும் 20-ம் திகதி அண்ணா நினைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றனர்.

வீரபத்திரர் கோவில் மைதானத்தில் நடைபெறவிருக்கும் அண்ணா விழாவில் சொற்பொழிவுகளும் சங்கீத பூஷணம் திரு. க. இரத்தினத்தின் இன்னிசை விருந்தும், மெல்லிசை நிகழ்ச்சிகளும், 'ஏமாற்றாதே ஏமாறாதே', 'பாசச்சுடர்', 'சீரழிந்தசிங்காரி' முதலிய நாடகங்களும் இடம்பெறும்.

## 'இடமாற்றத்தை ரத்துசெய்க'

கோப்பாய், வெள்ளி

கோப்பாய்அரசினர் வைத்தியசாலையில் மாவட்டவைத்திய அதிபராகக்கடமையாற்றும் திரு. எஸ் இராஜரத்தினத்தின் இடமாற்ற உத்தரவை உடன் ரத்துச்செய்யுமாறுகோரும். மகஜர் ஒன்று கோப்பாய்ப்பகுதி சன சமூக நிலையங்களாலும் கிராம சபையாலும் பிரமுகர்களாலும் கையெழுத்திடப்பட்டு கோப்பாய் எம். பி. மூலமாகசம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் முதல் மேற்படி வைத்திய அதிபருக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நெல் அறுவடை தீவிரம்

அராலி, வெள்ளி

அராலிப்பகுதில் விவசாயிகள் நெல் அறுவடையில் தீவிரமாக இறங்கியுள்ளனர். அறுவடை முடிந்த வயல்களில் சிகரெட்புகையிலை, மிளகாய் நாற்றுகள் நாட்டப்பட்டுள்ளன.

ஆனால் சில பள்ளமான வயல்களில் இன்னும் மழை நீர் வற்றாமலிருப்பதால் அறுவடை தாமதமாகின்றது. விளைந்த நெற்கதிர்கள் சாய்ந்து நீரில் விழுந்தவயல்களில் நெல் மணிகள் முளைகட்டிச் சேதமும் ஏற்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் நால்வர் ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் திரு. நல்லையாவால் நடத்தப்பட்ட பெரிய புராண விரிவுரைப் பூர்த்தி விழாவை முன்னிட்டு நால்வர் திருஉருவ ஊர்வலமொன்று மேற்படி கோவிலிலிருந்து ஆரம்பமானது.

மாவை ஆலய பிரதமகுருவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வூர்வலத்தில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் மணிவாசகரின் திருவுருவங்கள் முறையே அலங்கரிக்கப்பட்ட இடபம், முத்துப்பல்லக்கு வெள்ளை யானை குதிரைவாகனங்களில் எழுந்தருளின. மங்கல வாத்தியங்கள் முழங்கின. பஜனைக்குழுக்கள் திருமுறைப்பாராயணம் செய்தன. எங்கும் அடியார்களின் வாழ்த்தொலிகள் ஒலித்தன.

காங்கேசன்துறை. பலாலி வீதிவழியாக நல்லூர் முருகன் கோவிலை நோக்கி வந்து கொண்டிருந்த இந்த ஊர்வலத்திற்கு வழியெங்கும் கோலாகலமான வரவேற்பளிக்கப்பட்டன. வீதியெல்லாம் வாழை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு வீடுகளிலெல்லாம் பூரணகும்பங்கள் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆங்கிலமகா வித்தியாலயம், தையிட்டி கணேசவித்தியாலயம், பலாலி சித்தி விநாயகர் பாடசாலை வயாவிளான் ரோமன் கத்தோலிக்க பாடசாலை போன்ற கல்வி நிலையங்களின் முன்றலிலே மாணவர்களும் ஆசிரியர்களும் குழுமி நின்று மலர் தூவி திருவுருவங்களை வணங்கினர்.

**உரும்பராயில்**

இவ்வூர்வலம் உரும்பராயை அடைந்தபொழுது உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் உரும்பராய் கற்பகவிநாயகப்பிள்ளையார் கோவில் ஒரு சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது. வித்தியாசாலை அதிபர் திரு. சு. குமாரசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பில்பிரம்மஸ்ரீ ச.முத்துகுமாரசுவாமிக் குருக்களின் விசேட பூஜைகளும் பல சைவப் பெரியார்களது நால்வர் பற்றிய சொற்பொழிவுகளும் இடம் பெற்றன, அத்துடன் ஊரெழு ஆலயத்திலும் உரும்பராய் இந்துக்கல்லூரி முன்றல்களிலும் மக்கள் குழுமி நின்று வழிபாடு செய்தனர்.

(உரு நிரு

**ஏனைய இடங்களில்**

நல்லூர் முருகப்பெருமான் கோவிலும் வண்ணை வைத்திஸ்வரன் கோவிலிலும் தங்கு மறுநாள்காலை மாவைக்கோவிலை அடைந்த இவ்வூர்வலத்தை பரமேஸ்வராக் கல்லூரி ஞானசம்பந்தர் ஆதினம் யாழ் இந்துக் கல்லூரி போன்றவைகளும் மற்றும் வழியிலுள்ள இணுவில் மல்லாக கிராமங்களிலுள்ள கல்வி நிலையங்களும் வரவேற்றனர்.

**காங்கேசன்துறைக் கடைகள்**

## போயாதினத்தில் மூடுவதற்கு முடிவு

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறையில்வர்த்தகர்கள் சங்கம் ஒன்று உதயமாக இருக்கிறது. காங்கேசன்துறையில் உள்ள சுமார் 25 வர்த்தக ஸ்தாபனங்கள் வெவ்வேறுநாட்களில் மூடப்படுவது பற்றிப்பாவனையாளர்களின் புகார்களையடுத்து சகல வர்த்தக ஸ்தாபனங்களும் ஒருகட்டுப்பாட்டின்கீழ் ஒரேகொள்கையை அனுஸ்டிப்பதற்காக வர்த்தகர்சங்கம் அமைக்கப்படவிருக்கிறது

இச்சங்கம் அமைப்பது சம்பந்தமாக நடந்த பூர்வாங்க கூட்டத்தில் இனிஞாயிற்றுக்கிழமை தோறும்கடைகளைத் திறந்து போயாதினங்களில் பூட்டுவதெனமுடிவுசெய்யப்பட்டது.

**யாழ். மாவட்ட**

## உள்ளூராட்சிஊழியர்களுக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

த்தை ஆட்சேபிக்காவிட்டாலும் மேற்காஸிய விஷயத்தில் பாதுகாப்புச்சபை கடுமையான நடவடிக்கை எடுத்து அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றும், மேற்காஸியாவில் சண்டை நடைபெறும் பகுதிகளில் ஐ. நா. காவல்படைகளை நிறுத்தி வைக்கவேண்டுமென்று அறிவித்திருப்பதாக பாரிஸில் வெளியான செய்திகள் கூறுகின்றன,

மேற்காஸியாவில் சமீபகாலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்து அண்மையில் சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் மேற்கத்திய வல்லரசு நாடுகள் மூன்றுக்கும் கடிதம் அனுப்பியிருந்தார். இஸ்ரேல் தொடர்ந்து அரபுக்குடியரசின் மீது விமானத்தாக்குதல்களை நடத்திவந்தால் எகிப்துக்கு நவீனரக ஆயுதங்களை சோவியத் யூனியன் ஏராளமாக விநியோகிக்க நேருமென்று திரு. கோஸிஜின் கூறியிருப்பதாகவும் கூறப்பட்டது.

இச்செய்தி வெளியான அதேசமயம் இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் விடுத்த ஓர் அறிக்கையில் அரபுக்கள் போர் நிறுத்த எல்லையை அங்கீகரிக்கும் வரையில் விமானத் தாக்குதல்களைத் தமது படையினர் தொடர்ந்து நடத்திவருவார்களென்று அறிவித்தார்.

தியில் எகிப்தியரின் ராணு!

# டுப் செக்கை விலக்க கோரிக்கை

பிராக் பெப் 6

செக்கோஸ்லாவாக்கியாவில் ஸ்லோவாக் கம்யூனிஸ்ட் கட்யில் தீவிரமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஸ்லோவாக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் இம்ரோஸ்க்கி வகித்த தலைமைப்பதவிக்குதிரு ஜோஸப் விஞர்க் செய்யப்பட்டிருக்கிறார்.

செக்கோஸலாவாகிய கம்யூனிஸ்ட்சியின் முன்னாள் பொதுக் காரியதரிசி திரு. அலெக்சாண்டர் டுப்செக் கட்சியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று கூறி சிறு கோஷ்டியொன்று தீர்மானமொன்றைத் தாக்கல் செய்ததது. திரு டுப்செக் இப்பொழுது துருக்கியில் செக்கோஸ்லாவாக்கியாவின் தூதுவராக கடமையாற்றுகிறார். ......

## 35 பேர் பலியாகினர்

புவனஸ்அயர்ஸ், பெப். 6

ஆர்ஜென்டீனுவில் விமானம்ஒன்று விழுந்து நொருங்கியதில் 35 பேர் பலியாகியுள்ளனர்.

## லெயார்ட் வியட்னும் செல்கிறுர்

நியுயோர்க், பெப். 6

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. லெயார்ட் தென்வியட்னுமில் ஒருவாரம்தங்கிநிலைமைகளை ஆராய்வதற்காக விரைவில் அங்கு செல்லவிருக்கிறுர்.

— —

## அண்ணு தினம்

மாவிட்டபுரம், வெள்ளி

அண்ணுவின் தியாக உணர்ச்சியை நாமும் பின்பற்றிஞல் இலங்கையில் தமிழர் சுபிட்சமாக வாழ வழிபிறக்கும். என்று கந்தசாமி பத்தர் நல்லூரில் நடந்த அண்ணு ஞாபகார்த்தக்கூட்டத்தில் கூறிஞர்.

நல்லூர் கல்வியங்காடு சந்தை மைதானத்தில் கூட்டம் நடந்தது.

வீரமுரசு எஸ். ஆர். பதியும் பேசிஞர். மாநகரசபை உறுப்பினர் திரு. ஏ. நடராசா கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

சுத் தீர்மானித்துள்ளது

குழந்தைகளை நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாக வளர்க்கும் அறிவாற்றல் இலங்கைத் தாய்மார்க்குக் குறைவு என வைத்தியர்கள் கூறியதைத்தொடர்தே சுகாதார அமைச்சர் திரு. இ எல்.சேனநாயக்கா தாய்மார்களுக்குப் பயிற்சி வகுப்புகளை நடாத்த ஆலோசனை செய்துள்ளார்,

## 21,240 பேர் வர்த்தககல்வி பயில்கின்றனர்

கோட்டை, வெள்ளி

வர்த்தகப் பாடங்கள் இன்று நாட்டின் பாடசாலைகள் யாவற்றிலும் முக்கியமானதொரு இடத்தை வகிக்கிறது; எனகல்வியமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

'அதிகமான மாணவர்கள் தற்போது வர்த்தக படங்களைக் கற்க விரும்பியுள்ளதால் பாடசாலைகளில் இப்பாடங்களைக் கற்பிப்பதற்கான இடம், தளபாடம், ஆகியவற்றில் பற்ருக்குறையை இம்மாணவர்கள் எதிர்நோக்கவேண்டியுள்ளது. இப்பாடங்களைக் கற்கும் மாணவர்களின் தொகை 1966-ம் ஆண்டில் 17,145 ஆகவிருந்ததுஇன்று 21, 240 ஆக அதிகரித்துள்ளது. பரீட்சைகளுக்கு வர்த்தக பாடங்களை எழுதிச் சித்திபடையும் மாணவர்கள் விரைவில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுவிடுகிறுர்கள் என்று இப்பிரமுகர் குறிப்பிட்டார்

## யாழ். மாவட்ட ச.ச.நிலைய விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் பொதுவிழாவை இம்மாதம் 13ம் திகதி நடாத்துவதென சமாசக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

இவ்விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் யாழ் விளையாட்டரங்கிலும், கலை நிகழ்ச்சிகள் யாழ். மாநகர சபைமண்டபத்திலும் நடைபெறும். விளையாட்டு நிகழ்ச்சிகளின் பொறுப்பாளராக திரு. ஆ. மாட்டீனும், கலை நிகழ்ச்சிகளுக்கு திரு. ஆ. இராசையாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். விழாவுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தலைமைவகிப்பார். அரசாங்க அதிபரின் பாரியார் பரிசுகள் வழங்குவார் யாழ்ப்பாணம் நல்லூர் ஆகிய இரு தொகுதிகளினதும் ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் அழைப்பதெனவும் சமாசத்தினர் தீர்மானித்துள்ளனர். விழா சம்பந்தமான சமூகத்தொண்டன் மலரும் அன்று வெளியிடப்படும். (தே. நி)

பொருளாதார விருத்திக்கு

## கூட்டுறவே ஊற்றுக்கால்

உடுப்பிட்டி, வெள்ளி

ஒரு நோக்கால் அடையமுடியாததைப் பல நோக்கால் அடைந்து கொள்ளமுடியும். கூட்டுறவு முறையில் நாம் இயங்குவதனுல் பல சாதனைகளைப் புரியலாம்''

கரணவாய் மத்திய ஐக்கிய பண்டகசாலையைப் பலநோக்குச் சங்கமாக மாற்றுவதற்காக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கூட்டுறவு பரிசோதகர் திரு அலோசியஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாதக் குருக்கள் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. அலோசியஸ் தொடர்ந்து பேசுகையில் கூட்டுறவுதான் உண்மையான பொருளாதார அபிவிருத்திக்கான ஊற்றுக்கால் என்பதனை வலியுறுத்திஞர்.

பலநோக்கச் சங்கமாக மாற்றும் முயற்சியில் துரிதமாக உழைத்துவரும் சங்கச் செயலாளர் திரு. க. தியாகராசாவிற்குக் கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. ஆசிரியர் திரு. தாமோதரம்பிள்ளை நன்றியுரை கூறிஞர்.

# தமிழர் வீடுகளை கன்னடர் தீயிட்டு கொளுத்தினர்

## பெங்களூரில் ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப். 6

தமிழ் நாட்டிலுள்ள தாளவாடி பாகுதியை மைசூருடன் சேர்த்துவிட வேண்டும் என்று கன்னடர்கள் நடத்தும் போராட்டம் குறித்து மேலும் தகவல்கள் வந்துள்ளன.

தாளவாடியில் கன்னடர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோழுது வட்டல்நாகராஜ் என்பவருடன் பலர் கைது செய்யப்பட்டார்கள் இதை எதிர்த்து மைசூரில் கன்னடர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மைசூரில் உள்ள தமிழர்களின் வீடுகளுக்கும் கடைகளுக்கும் அவர்கள் கற்களை எறிந்து கலாட்டா செய்தனர். ஓழுதமிழ் பெண்மணியை உயிருடன் எரிக்கவும் அவர்கள் எத்தனித்ததாக செய்திகள் கூறுகின்றன. மைசூரிலுள்ள தமிழர்களுக்கு பாதுகாப்புஅளிக்கும்படி தமிழ்நாடு முதலமைச்சர் மைசூர் முதலமைச்சரைக்கேட்டுக்கொண்டார்' மைசூரிலுள்ள தமிழர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும்என்று மைசூர் முதல் மந்திரி திரு. வீரேந்திர பாட்டில் பதில் அனுப்பியிருக்கிறுர்.

பெங்களூரில் தமிழர்கள் வாழும் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. ஒரு தமிழ் பெண்ணை உயிரோடு எரிக்க கன்னடர்கள் முயற்சிசெய்தார்கள் என்று தெரிகின்றது.

பெங்களூர் சிட்டி மார்க்கெட் ஒப்பர் பேட்டை, பளே பேட்டை, காட்டன் பேட்டை மெஜஸ்டிக் ஆகிய பகுதிகளில் புலகடைகள்மீது சரமாரியாக கல்வீசப்பட்டன. ஸ்ரீராமபுரத்தில் சில கடைகளில் புகுந்து சூறையாடிஞர்கள்.

தமிழ்ப் பெயர்ப் பலகைகள் சேதப்படுத்தப்பட்டன.

ஓகாலிபுரம் பகுதியில் தமிழர்கள் வாழும் 4 குடிசைகளுக்கு தீவைக்கப்பட்டது. தேமல்குன்றி பகுதியில் 2 குடிசைகள் கொளுத்தப்பட்டன.

தீவைக்கமுயன்றதாக 2பேர் கைது செய்யப்பட்டனர்.

றது. விளைந்த நெற்கதிர்கள் சாய்ந்து நீரில் விழுந்தவயல்களில் நெல் மணிகள் முளை கட்டிச் சேதமும் ஏற்பட்டுள்ளது.

ஒரு குடிசையில் தமிழ்ப் பெண்ணை உயிரோடு போட்டுத் தீவைத்துவிட்டு ஓடிவிட்டார்கள். அந்தப் பெண் கூச்சல் போட்டதைத் தொடர்ந்து அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து காப்பாற்றிஞர்கள்.

குடிசை தீயில் எரிந்து அடியோடு நாசமடைந்தது.

பெங்களூர்-ஒசூர் ரோட்டில் தமிழக அரசைச் சேர்ந்த 2 பஸ்களை நிறுத்தி அவற்றுக்குத் தீவைக்க முயன்ருர்கள்.

ஆஞல் அவர்களைத் தமிழர்கள் விரட்டியடித்தனர்

மல்லீஸ்வரம் பகுதியில் கன்னடர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே கைகலப்பு மூண்டது. இதில் 6 பேர் காயமடைந்தார்கள்.

கலவரம் தொடர்பாக 27 கன்னடர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். 4 பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

மாவடிப் பகுதியில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் நிறுத்தப்பட்டனர். ......

## 'வெள்ளை அரிசி வேண்டாம்'

பொல்காவலை, வெள்ளி

மக்களுக்குத் தொடர்ந்து வெள்ளை அரிசியைப் பங்கீட்டரிசியாக வழங்குவதை எதிர்ப்பதெனப் பொல்காவலைப் பட்டினசபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

'இந்த வெள்ளை அரிசி போஷாக்கற்றதும், வயிற்றுக்கோளாறுகளைக்கொண்டு வருவதாக இருப்பதோடு, நோயாளிகளுக்கும் பெரும் தீங்கை விளைவிக்கிறது' என மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய காமினி டீ சில்வா தெரிவித்தார்.

— —

## பிரிவுபசாரம்

சுழிபுரம், வெள்ளி

பெரியதம்பனைக் குடியேற்றக் கிராமத்தில் சுமார் ஐந்து ஆண்டுகளாக குடியேற்ற அதிகாரியாக பணிபுரிந்து மாற்றலாகிச் சென்ற திரு. இ. பத்மநாதன் சேவையைப் பாராட்டி பிரிவுபசாரம் திரு. பா. அருள்லிங்கம் தலைமையில் நடைபெற்றது அவரது சேவையைப் பாராட்டி பலர் பேசிஞர்கள்:

ளும் ஒருகட்டுப்பாட்டின்கீழ்!

யாழ். மாவட்ட

## உள்ளூராட்சிஊழியர்களுக்கு அமைச்சர் பாராட்டு

மாவிட்டபுரம், வெள்ளி

''யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி ஊழியர்கள் கடமையுணர்ச்சியுடன்செயலாற்றுவதால் தான் எம்.பிக்கள் எவரும் புகார் கூறவில்லை.'' என உள்ளூராட்சி அமைச்சர் திரு ஆர்.பிரேமதாசா காங்கேசன்துறை விருந்தினர் விடுதியில்உள்ளூராட்சி ஊழியர் மத்தியில் பேசுகையில் கூறிஞர்.

சென்ற வாரம் இங்கு விஜயம் செய்தஅமைச்சர் கடைசியாகக் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில் பேசுகையில் தெரிவித்ததாவது:- எந்தத் துறையிலாயினும் சரி, அவ்வத்துறைகளின் முன்னேற்றம் அவற்றின்ஊழியர்களில்தான்தங்கியுள்ளது.எல்லாப் பகுதிகளிலும் எம்.பிக்களும் உள்ளூர்ஆட்சி மன்றங்களின் தலைவர்களும் குறைகள் பற்றிப்புகார்கள் தெரிவிப்பார்கள். இங்குமேற்கொண்டவிஜயத்தின் போது எவரும் எனக்குப் புகார் செய்யாததற்கு காரணம் இங்குள்ள எமது பகுதி ஊழியர்களின்கடமையுணர்ச்சிதான்

இடைவேளை ஆரம்பமாகி சிலநிமிடத்தில் பேராதனைப் பல்கலைக்கழக வீரர் ஜேக்கப் மீண்டும் அடுத்தடுத்து இரு கோல்களை விளாசிஞர். இதையடுத்து யாழ் கோஷ்டியும் ஒரு கோல் போட்டது.

இறுதியில் பேராதனைக் கோஷ்டி 4,2 கோலால் யாழ் கோஷ்டியை வென்றது. யாழ் பாடசாலைக்கோஷ்டியில் மகாஜஞ வீரர்களான மோகன்ராம், தர்மகுலசிங்கம் ஆகியோர் இரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணர் மத்தியஸ்தம் வகித்தார்.

சுதந்திரத்தை

## 'இலகுவாகப் பெற்றதால் அருமை தெரியவில்லை'

சுழிபுரம், வெள்ளி

''சுதந்திரம் நமது பிறப்புரிமையாகும். உலகநாடுகள் பல பெரும் போராட்டங்களை நடத்தியும் இரத்தம் சிந்தியும் சுதந்திரத்தைப் பெற்றன. ஆனுல் எமது இலங்கை சுலபமாக சுதந்திரத்தைப் பெற்றது. இலகுவாக பெற்றதிஞல் போலும் அதன் அருமை பெருமையை தெரியாது உதாசீனமாக மக்கள் இருக்கின்றனர். மக்கள் - மாணவர்கள் ஆகியோரிடம் சுதந்திரத்தின் மகிமையை அறிய வைப்பது ஆசிரியரின் கடமையாம். கிடைத்த சுதந்திரத்தை பேணிக் காப்பதும் நமது கடமையாகும். இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்துப்பேசிய கலாசாலை அதிபர் எஸ். விசுவலிங்கம் குறிப்பிட்டார். வித்துவான் பி. கணபதி உட்பட மற்றும் பலர் பேசினர். அணி வகுப்பும் நடைபெற்றது.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. கே. இரத்தின வேலுப்பிள்ளை என்பவரால் கூப்பன் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 7—2—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: பகல்12-03, 1-00.

இரவு 7-15 பாட்டு — எம் ஏ. குலசீலானந்தன், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப் பிரசங்கம் — இரா. சிவ அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உயர்வு, தாழ்வுகளை மறந்து எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்று உணர்வதைவிடச் சிறந்த தியாகம் இன்று வேறொன்றுமில்லை.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 25-ந் திகதி (7-2-70)


## அடையாள வேலை நிறுத்தம்

சுமார் ஆறு லட்சம் தோட்டத்தொழிலாளர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்யவிருக்கின்றனர். துறைமுகத்திலும் பெருந்தொகையான தொழிலாளர் தொடர்ந்து வேலை நிறுத்தம்செய்துவருகின்றனர். கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையிலுமுள்ள இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்களின் பொது வேலைநிறுத்தமும் நீடித்து வருகிறது இதேசமயம் வாழ்க்கைச் செலவு உயர்வும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

தோட்டத்தொழிலாளர் அங்கம் வகிக்கும் முக்கிய தொழிற்சங்கங்கள் அனைத்தும் இன்றைய அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்கின்றன திரு. எஸ் தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸும் திரு. என் சண்முகதாசன் தலைமையிலுள்ள செங்கொடிச் சங்கமும் முன்னின்று நடத்தும் இந்த ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் இதர தோட்டத்தொழிலாளர் சங்கமும் சேர்ந்து ஒத்துழைக்கின்றன, வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை வழங்கவேண்டுமென்பதும் மடக்கும்பரைத் தோட்ட வேலைநிறுத்தத்துக்கு சமரசத் தீர்வு காணவேண்டுமென்பதும் இந்த வேலைநிறுத்தத்துக்கான முக்கிய கோரிக்கைகளாகும். ஆகக்குறைந்த சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளரது வேலைநாட்கள் குறைக்கப்பட்டுவிட்டதால் அன்றாட வயிற்றுப் பாட்டுக்கே தொழிலாளர் திண்டாடும் நிலை ஏற்பட்டுவிட்டதென்றும் இதனை அரசாங்கத்தினதும் முதலாளிமாரினதும் கவனத்துக்குக் கொண்டுவரவே இந்த அடையாள வேலைநிறுத்தம் என்றும் இந்த அடையாள வேலைநிறுத்தத்தின் பின் கோரிக்கைகளைப் பெறுவதற்காக பொதுவேலைநிறுத்தம்

என. தனியார்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஏதோ சில கிடைக்கத்தான் செய்திருக்கிறது. தோட்டத்தொழிலாளரைப் பொறுத்தவரையில் தினசரி வேலை கிடைப்பதே கஷ்டமாகிவிட்டது. அவர்கள் தங்கள் கஷ்டத்தை எடுத்துக் கூறியும் கவனிப்பார் யாருமில்லை. இந்நிலையில் தங்கள் நிலையை அரசாங்கத்தினதும் தோட்ட நிர்வாகத்தினதும் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு இன்றைய ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள முடிவுசெய்ததற்காக யாரும்குறைசொல்ல இடமில்லை.

நமது நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களான தேயிலையும் ரப்பரும் வேறு நாடுகள் சிலவற்றுடன் போட்டிபோடவேண்டிய நிலையிலிருக்கும் இச்சமயத்தில் தோட்டப்பகுதி முழுவதும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறுவது நாட்டுக்கு எவ்வளவு பெரும் நஷ்டத்தைக்கொண்டு வருமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. துறைமுகவேலை நிறுத்தமும் இதர துறைகளிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் தோட்டத் தொழிலாளரின் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நலிந்துபோயிருக்கும் நமது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மோசமான நிலைக்குக்கொண்டுவரும் என்பது தெளிவு. ஒரு தொழிற்சங்கத்தலைவர் கூறியிருப்பதுபோல தோட்டத் தொழிலாளரின் நியாயமான குறைகளுக்குத் தீர்வுகாணப் படாவிட்டால் பொதுவேலை நிறுத்தமும் ஆரம்பமாகலாம் பொதுவேலைநிறுத்தம் நடைபெற்றால் நிலைமை எப்படியாகுமென்பதைச் சொல்லவேண்டியதில்லை

தோட்டத் தொழிலாளரின் சம்பள விகிதம் பற்றியும் அவர்களுக்கு வேலைவழங்கும் முறைபற்றியும் ஆராய்

# லெனின் நூற்றண்டு

# ஏகாதிபத்திய கட்டத்தின் இறுதியில் சமுதாயப் புரட்சி நடந்தேதீரும்

20-ம் நூற்றாண்டின் துவக்கமானது முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் பல முக்கியமான புதிய அம்சங்களைக் கண்டது. பொதுவான மூலதனத்தின் ஆதிக்கம், நிதி மூலதனத்தின் ஆதிக்கமாக மாறியது. சுதந்திரமாகப் போட்டியிடும் வணிக நிறுவனங்களுக்குப் பதிலாக ஏகபோகங்கள் இடம்பெற்றன. பூர்ஷ்வா சமுதாயம் ஏகாதிபத்திய வளர்ச்சிக் கட்டத்தை அடைந்தது. இந்த மாற்றத்தின் சாரமும், வரலாற்று முக்கியத்துவமும், ''ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' என்ற லெனின் நூலில் கூறப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் ஐந்து மிக முக்கியமான பொருளாதாரப் பண்புகளை லெனின் வரையறுத்தார். முதலாவதாக முதலாளித்துவத்தின் முக்கிய கேந்திரங்களில் குவிக்கப்படும் உற்பத்தியானது ஓர் உயர்ந்த கட்டத்திற்குச் செல்லுகிறது. அது ஏகபோகமாக (ஒரு பண்டத்தின் பெரும் பகுதி உற்பத்தியையும், விநியோகத்தையும் தமது கைப்பிடியில் வைத்திருக்கும் முதலாளிகளின் கூட்டு நிறுவனமாக) உருவெடுக்கிறது. இந்த ஏகபோகம் பொருளாதாரத்திலும், அரசியலிலும் தீர்மானமான பாத்திரத்தை வகிக்கத் தொடங்குகிறது. இரண்டாவதாக பாங்கு மூலதனமும் தொழில் மூலதனமும் இணைந்து நிதி மூலதனத்தை உண்டாக்குகின்றன. இதிலிருந்து மாபெரும் பொருளாதார சக்தி கொண்ட ஒரு சிறு குழுவின் ஆட்சி தோன்றுகிறது. மூன்றாவதாக மூலதன ஏற்றுமதியானது பண்டங்களின் ஏற்றுமதியைப் போல அல்லாமல் ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு சில ஏகபோக உரிமையாளர்கள் பல நாடுகளைச் சுரண்டவும், ஒடுக்கவும் வசதியளிக்கும் கருவியாக அது மாறுகிறது நான்காவதாக சர்வதேச ஏகபோகக் கூட்டுகள் உருவாக்கப்படுகின்றன. பொருளாதார ரீதியில் உலகினைக் கூறு போடும் போராட்டத்தில் அவை பங்கு கொள்ளுகின்றன. ஐந்தாவதாக மிகப் பெரிய முதலாளித்துவ நாடுகள் உலகைப் பல பிரதேசங்களாகப் பங்கு போடுகின்றன. பின்னர் உலகை மீண்டும் பங்கு போடுவதற்கான போராட்டம் அவற்றிடையே துவங்குகிறது

இத்தகைய நிகழ்வுகளின் தீர்மான அம்சம் என்னவெனில் உற்பத்திக் குவிப்பும், மூலதனக் குவிப்பும் வெள்ளமெனப் பெருகுகின்றன. ஒரு சிறிய குழுவின் கையில் ஒரு சில கோடீசுவரர்களின் கையில்-செல்வம் குவிகிறது. இந்தக் குழுவிடம் மாபெரும் பொருளாதார, அரசியல் அதிகாரம் உள்ளது. எனவே அவர்கள் இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களைச் சுரண்டவும், வளர்ச்சி குன்றிய நாடுகளைக் கொள்ளை அடிக்கவும், அடிமைப்படுத்தவும் பற்பல நாடுகளின் வாழ்வை நாசப் படுத்தவும் முடிகிறது.

## - இவான் ஆலுப் -

பூர்ஷ்வா உலகில் முதலாளித்துவச் சுறா மீன்கள் எப்பொழும் சிறிய மீன்களை விழுங்கியுள்ளன. ஆனால் பலவீனமான எதிரிகளை விழுங்குதலும், முதலாளித்துவ கார்ப்பரேஷன்களை இணைத்தலும், இப்பொழுது வேகமாக நடைபெறுகின்றன.

முதலாளித்துவ அரசாங்க இயந்திரத்தின் இணைபிரியா அங்கமாக ஏகபோகங்கள் ஆகி வருகின்றன. அந்த இயந்திரத்தைத் தமது சுய நலன்களுக்கு அடிமைப் படுத்தி வருகின்றன. ஏகபோக பூர்ஷ்வாக்களின் விவகாரங்களைக் கவனிக்கும் கமிட்டியாக அரசாங்கம் மாற்றப்படுகிறது. தனிப்பட்ட பெரு முதலாளிகள் மட்டுமின்றி ஏகபோகங்களும் அரசாங்க இயந்திரமும் ஒருங்கிணைந்து, உழைப்பாளி மக்களை எதிர்க்கின்றன.

ஒரு சிறிய குழுவின் கையில் கோடிக்கணக்கான செல்வமும், பரந்த அதிகாரங்களும் இருந்தால் அதன் விளைவுகள் நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் வாழ்க்கை முறையில் பிரதிபலிக்கவே செய்யும். எனவே ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையிலுள்ள பிளவு மேலும் அதிகரிக்

த்த அழுகிப்போன முதலாளித்துவம் ஆகும், சோஷலிசப் புரட்சிக்கு முந்திய சமூக அமைப்பாகும். முதலாளித்துவத்தில் இருந்து ஏகபோகம் பிறந்தது. அது ஏற்கனவே செத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவம் ஆகும், சோஷலிஸத்திற்கு மாறுவதற்கான துவக்க நிலையைக் குறிப்பதாகும் என்று லெனின் எழுதினர்.

ஏகபோகங்ளின் வளர்ச்சியானது சோஷலிசத்திற்கான முன் தேவைகளை உண்டாக்குகிறது முதலாளிகள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் உற்பத்தியின் பொதுத் தன்மைக்கும் உற்பத்திப் பண்டத்தின் தனிஉடமைக்கும் இடையிலான முரண்பாடுகள் மேன்மேலும் அம்பலமாகின்றன சமுதாய உற்பத்திச் சக்திகள் மிகவும் வளர்ந்துள்ளன. முதலாளித்துவ உறவுகள் என்ற குறுகலான கட்டுக்கோப்பு அவற்றின் வளர்ச்சிக்கு இடையூறுகஉள்ளது எனவே அவை தீவிரமாக மாறவேண்டியுள்ளது. பல நாடுகளின் ஒத்துழைப்புடன் இங்கியவரும் உற்பத்தி அமைப்புகள் சில கோடீசுவரர்களின் சொந்தச் சொத்தாக விளங்கும் அசாதாரண நிலவரத்தை மக்கள் மிகத் தெளிவாகக் காணத் துவங்கி விட்டனர்

ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கான ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்தகொள்கையினல், தீவிர முரண்பாடுகளும் சமுதாய நெருக்கடிக்ளும் ஏற்படுகின்றன, தொழிலாளி வர்க்கத்தைத் தலைமையாகக் கொண்ட உழைக்கும் மக்களின் விரிந்த பகுதிகளில் இந்தக் கொள்கைக்கு மேன்மேலும் எதிர்ப்பு உண்டாகிறது. இதன் காரணமாகத் தீவிர சமுதாய மாறுதல்களுக்கும் ஜனநாயகத்திற்கும் சோஷலிஸலிசத்திற்கும் பாடுபடுகின்ற சக்திகள் உருவாகின்றன. தொழிலாளி வர்க்க இயக்கமும் தேசவிடுதலை இயக்கமும் எல்லா முற்போக்குச் சக்திகளும்ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒன்று திரண்டு வருகின்றன.

# செய்திச் சுருக்கம்

### சிங்களத்தில் அண்ணு நூல்கள்

'அண்ணு புத்தர் பெருமானைப்பற்றி எழுதிய நூலைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவதோடு ஏனைய அவர் எழுதிய நூல்களும் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்' என்று திரு. பூபதிதாசன் அண்ணு நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில் தெரிவித்திருக்கிருர்.

0 0 0

### இப்பொழுது நினைத்தாலும்

### தொழிலாளருக்கு அறிவுரை

காந்தி நூற்றுண்டு விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த இந்தியாவின் சர்வதேச விவகார ஆராய்ச்சிக்குழுத் தலைவர் திரு. கன்ஸ்ரு. எட்டியாந்தோட்டை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தின் குழுமியிருந்த தொழிலாளர்களுக்கு அறிவுரை வழங்குகையில் நீங்கள் இந்நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதோடு சிங்கள மக்களுடன் சினேக பான்மையுடன் நடந்து

# நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணத்துக்கும் மன்னுருக்குமிடையே பூநகரி, மாந்தை வழியாகச் செல்லும் பஸ் சேவைகளைப் பற்றி மன்னுரிலிருந்து வந்த ஓர் அன்பர் பிரமாதமாகப் புகழ்ந்து கூறுகிருர்.

முன்பெல்லாம் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல வவுனியா கண்டு மடு ரோட்டு வழியாகத் தான் பஸ் வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன. இது மிகவும் சிரமமான பயணம். சுமார் ஆறு மணித்தியாலங்கள் பஸ்ஸுக்குள்ளே முடங்கிக் கிடக்க வேண்டும். கரையோரமாகச் செல்லும் புதிய பாதையில் இரண்டே மணித்தியாலங்களில் பிரயாணம் முடிந்துவிடுகிறதாம். தினமும் ஆறு பஸ் சேவைகள் நடக்கின்றன என்று கேள்வி.

திருக்கேதீஸ்வரம் போய் வருகிறவர்களுக்கு இந்த பஸ் சேவை மிகவும் வசதியாக அமைந்துவிட்டது. காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டால் மத்தியானம் பாலாவியில் தீர்த்தமாடி பூஜையையும் கண்டு கொண்டு சாயுங்காலம் வீட்டுக்கு திரும்பிவிடலாம்.

அப்படியே மன்னுரிலிருந்து கரையோரமாக புத்தளத்துக்கும் பாதை அமைக்கப்பட்டுவிட்டால் கொழும்பு பஸ் சேவை மிகவும் அற்புதமாக நடந்துவிடும். தற்சமயம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே நேரடியான பஸ் சேவை இல்லாதது ஒரு பெரிய குறையாயிருந்துவருகிறது. சமீபத்தில் நடந்த ரயில்வே வேலை மறுப்பால் ரயில் போக்குவரது நின்றுவிட்டபோது இக்குறையை பொதுமக்கள் நன்ருக உணர முடிந்தது. மன்னுர்-புத்தளம் தெருவும் செப்பமாகிவிட்டதால் இந்தக் குறையை அடியோடு நீக்கிவிடலாம். மன்னுரிலிருந்து மறிச்சுக்கட்டி வரையில் மண்பாதை இருக்கிறது. அங்கிருந்து பொம்பரிப்பு வரை மணற்காடு, இந்தப் பாதை இலகுவில் திருத்தப்படலாம்.

இதில் இன்னுமொரு நன்மை இருக்கிறது. இந்தக் கரையோரங்களில் உல்லாசப் பிரயாணிகளை வரவேற்கக் கூடிய இன்பகரமான தென்னஞ்சோலைகளும், பசும் மெத்தை போன்ற கடற்கரைகளும் இருக்கின்றன். ஆங்காங்கே வாடிவீடு இங்கே வசீகரிக்கப்படுவார்கள்.

பூநகரி, மாந்தை முசலி மாவட்டங்களில் இந்தக்கால போக வேளாண்மை கண்கொண்டு பார்க்க முடியாத அளவுக்கு விளைந்திருக்கிறதாம். போன வருடமும் அதற்கு முந்திய வருடமும் விளைச்சல் குறைவு. இந்த வருடமும் அந்த வட்டி எல்லாவற்வையும் எடுத்துவிடலாம் என்று கமக்காரர் எதிர்பார்க்கிருர்கள்.

மன்னுர் மாவட்ட அரசாங்க அதிபர் நெற்பயிர் செய்யும் கமக்காரருக்கு தாராளமாக கடனுதவி செய்கிருர் காரணம், எப்படியாவது அப்பகுதிகளில் விளைச்சல் அதிகமாகும். அத்துடன்கமக்காரரும் போகத்துக்குப் போகம் கடனை நிவர்த்தி செய்வார்கள் என்ற நம்பிக்கை. இவ்விடங்களில் இரண்டு போக விளைச்சல் உண்டு.

அரசாங்கம் வழங்கும் கடனைத் திருப்பிக் கொடாத கமக்காரரின் அரிசிக்கூப்பன் புத்தகமும், அவருக்குப் பிணை நின்றவர்களின் கூப்பன் புத்தகங்களும் பறிமுதல் செய்யப்படுவதற்கு சட்டம் இருக்கிறது. ஆனுல் பெரும்பாலானவர்கள் கூப்பன் பறிமுதலாகும் அவமானத்துக்கு உள்ளாகாமல் எப்படியாவது கடனைத்தீர்த்துக் கொள்ளுகிருர்கள்.

இவ்வருடத்தில் காலபோகமும் சிறுபோகமும் நன்ருக விளையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகையினுல் கமக்காரர் அரசங்கத்திடம் பெற்ற கடனை முறையாகக் கட்டிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

—வழிப்போக்கன்

அரசாங்கம்

## கடலை எண்ணெய் தேவையை பூர்த்திசெய்யும்

கோட்டை, வெள்ளி மாஜரீன், சவர்க்காரம் போன்ற சில உற்பத்திப் பொருள்களுக்கு நிலக்கடலை எண்ணெய் பயன்படுத்தப் படுகிறது. இதைஉற்பத்தியாளர்கள் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்கிருர்கள், இதைநிறுத்தி உள்நாட்டிலேயே இந்த எண்ணெயைப்பெற வசதிசெய்ய அரசாங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டுவரவே இந்த அடையாள வேலைநிறுத்தம் என்றும் இந்த அடையாள வேலைநிறுத்தத்தின் பின் கோரிக்கைகளைப் பெறுவதற்காக பொதுவேலைநிறுத்தத்தை ஒன்றுக்குத் தயார் செய்வோம் என்றும் இந்த அடையாள வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தும் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நாட்டின் பொருளாதார வாழ்வுக்கு உழைத்துவரும் தோட்டத் தொழிலாளர்தான் இந்த நாட்டில் புறக்கணிக்கப்பட்ட வர்க்கத்தினராக வாழ்கின்றனர் என்பது நாடறிந்த விஷயம். மாதச்சம்பளம் இலையாது நாட்சம்பளம் அதுவும் இதர துறையிலுள்ள தொழிலாளர் பெறும் கூலியைவிட மிக மிகக் குறைந்த கூலி. கூலி குறைவானது மட்டுமல்ல தினசரி வேலை இடைக்குமா என்பதும் சந்தேகம். தோட்டத்தொழிலாளரின் சுகாதார வசதி, தோட்டப் பிள்ளைகளின் கல்விநிலை ஆகியவை பற்றிச்சொல்லவே வேண்டாம். வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளிப்பதற்காக அரசாங்கசேவையிலுள்ளவர்களுக்கும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சம்பள உயர்வும் விசேஷ படியும் வழங்கப்பட்டுவந்துள் சொல்லவேண்டியதில்லை

தோட்டத் தொழிலாளரின் சம்பள விகிதம் பற்றியும் அவர்களுக்கு வேலைவழங்கும் முறைபற்றியும் ஆராய்ந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளை தொழில் அமைச்சு மேற்கொள்ள வேண்டியது அவசியம். தோட்ட நிர்வாகத்தினரையும் தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேச்சுவார்த்தை மூலம் இதற்கு நல்லதொரு தீர்வுகாணவேண்டும்

பொதுத்தேர்தல் நெருங்கும் சமயமாக இருப்பதால் இப்பிரச்னையை ஆளும் கட்சியினரோ எதிர்க்கட்சியினரோ தேர்தல் பிரச்னையாக்கவோ, தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தக் கூடிய விஷயமாகவோ எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இதனுல் அவர்களுக்குத்தான் பாதகம் ஏற்படலாம். தோட்டத்தொழிலாளரும் இந்நாட்டு மக்கள் தான் என்பதையும் அவர்களுக்கும் வயிறு தான் என்று இருக்கிறதென்பதையும் உணர்ந்துகொண்டால் (அவர்களில் பலருக்கும் வாக்குரிமை இல்லையென்றாலும் கூட) அவர்களின் நியாயமான குறைகளுக்கு நல்லதொரு தீர்வுகாண்பது கடினமல்ல.

# உடுவில் கி. ச. கொண்டாடும் உள்ளூராட்சி வாரவிழா

மல்வாகம, வியாழன்

உடுவில் கிராமசபையினர் இம்மாதம் 8-ம் திகதிமுதல் 14-ம் திகதிவரை கொண்டாடவிருக்கும் உள்ளூராட்சி வார நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இணுவில், கந்தசாமி குடும்ப மாதா கோயில் கோவில் மல்வம் திருக் ஆகிய ஆலயங்களில் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அ. அ. யோசெப் தலைமையில் கிராமசபை திறந்தவெளியரங்கில் சமயசொற்பொழிவுகள் மாலையில் இடம்பெறும்.

தொழில் மகத்துவ தினமான இரண்டாம் நாள் 9-ம் வட்டார சுடலை ஒழுங்கை சிரமதானம் மூலம் செப்பனிடப்படும். மாவட்ட விவாசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர், உள்ளூராட்சி அமைச்சின் வடமாநில பொறியியலாளர் திரு. சி. புவனேஸ்வரன் இவ்விழாவில் கலந்துகொள்வர். உணவு உற்பத்தியில் சிறந்த விவசாயிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. காங்கேசு தலைமையில் மூன்ருந்தினம் சுகாதார ஆரோக்கியம் பற்றிய சொற்பொழிவுகள நடாத்தப்படும். சிறந்த ஆரோக்கியமான குழந்தைகளுக்கு பரிசுகள வழங்கப்படுவதுடன் பேச்சுப் போட்டி படக்காட்சி என்பனவும் இடம்பெறும்.

சேரிப்பகுதிகளைப் துப்புரவு செய்வதுடன் நான்காம் நாள் வீடமைப்பு, சேரி ஒழிப்பு பற்றிய பிரசாரம் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் தலைமையில் நடைபெறும்.

நூல்நிலைய இலக்கியவிழா சம்பந்தமாக ஐந்தாம்நாள் தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் புத்தகக் கண்காட்சி திறந்துவைக்கப்படும். மாலையில் யாழ் மாவட்ட சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. வ. கிருஷ்ணசாமி தலைமையில் பசிரங்க இலக்கியச் சொற்பொழிகள இடம்பெறும்.

கலாச்சார விளையாட்டு தினத்தை முன்னிட்டு ஆருவது தினம் தாச்சி, கைப்பந்தாட்டப் போட்டிகளும், நடன நாடக நிகழ்ச்சிகளும் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இறுதி நாள் சமூக தினம் உடுவில் எம். பி. திரு வி. தருமலிங்கம் தலைமையில் கொண்டாடப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரிமாதம்7-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

0 0 0

## இப்பொழுது நினைத்தாலும்

நான் கல்லோயா அபிவிருத்திச் சபையில் ஓர் உறுப்பினராகப் பணியாற்றிவரும் காலத்தில் 1956-ம் ஆண்டும் அதைத் தொடர்ந்து 1958-ம் ஆண்டும் இப்பகுதியில் நடந்த கலவரங்களை இப்பொழுது நினைத்தாலும் மயிர்க்கூச்செறிகிறது. கடந்த அரசாங்கத்தில் நடந்த இச் சம்பவங்கள் நமது அரசாங்கத்தில் ஒரு காலமும் நடவா. என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர்செனட்டர் ஜெ. எ. அமரதுங்கா மட்டுநகர் தேசவளக்காட்சி ஆரம்பவிழாவில் கூறியிருக்கிருர்.

0 0 0

## ஊழியர் வேலைநிறுத்தம்

ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் பொலிசாரிஞல் மோசமாகத் தாக்கப்பட்டதைக் கண்டித்து, உப்பளத்தைச் சேர்ந்த 1000 ஊழியர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அறிவுரை வழங்குகையில் நீங்கள் இந்நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதோடு சிங்கள மக்களுடன் சினேகபான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

0 0 0

## மகோற்சவம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான மாசி மகோற்சவத் திருவிழா இம்மாதம் 21-ம் 23-ம் திகதிகளிற் நடைபெறும் பஞ்ச இரதோற்சவம், பூங்காவன உற்சவங்களுடன் முடிவடைகிறது தினமும் நடைபெறும் மேற்படி திருவிழாவில் சுவாமிநாதத் தம்பிரானின் சங்கீதக் கதாப்பிரசங்கம் இடம்பெறுகிறது.

0 0

## எதிரி விடுதலை

இறக்குமதி செய்யப்பட்ட புடவைகளை அதிக லாபம் வைத்து விற்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் புறக்கோட்டையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் குற்றம் சரியாக நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டிருக்கிருர்.


## திருமண அழைப்பு

மணமகன்;
தில்லையர் வர்ணகுலசிங்கம்
(Bsc)
ஆசிரியர் மைக்கல்ஸ் கல்லூரி
பூநாரி

மணமகள்:
பொன்னம்பலம் விமலாதேவி
(Bsc)
(யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்
ஆர். மகேந்திரனின்சகோதரி)

திருவருள் துணையால் நிகழும் சௌமிய ஆண்டு தைமாதம் 26-ம் நாள் (8-2-70) ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட சுப முகூர்த்தத்தில் திருமணம் யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் ஆலயத்தில் நிறைவுறும். அத்தருணம் உறவினர் அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்ருேம்.

492, காங்கேசன்துறைவீதி
வண்ணார்பண்ணை.

திருமதி சிவபாக்கியம்
பொன்னம்பலம்
(மணமகளின் தாயார்)
1486


## ஜப்பானிய—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் திரு. வீ. கந்தவனம் பேசுகையில் கூறியதாவது: யப்பான் தேசத்து பெண்களைப்போல நமது நாட்டுத் தாய்மார் குழந்தைப் பராயத்தில் இன, மொழி, நாட்டுப்பற்றை நம் சிறுவர்களுக்கு ஊட்டுதல்வேண்டும். நமது தனித்துவத்தைப் பேணி கலை, கலாச்சாரத் துறைகளில் நாம் போதிய வளர்ச்சியை ஏற்படுத்துதல் அவசியம்.

முதலாளித்துவ சமுதாயத்தின் வாழ்க்கை முறையில் பிரதிபலிக்கவே செய்யும். எனவே ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையிலுள்ள பிளவு மேலும் அதிகரித்துள்ளது. வெகுஜனங்களைச் சுரண்டுவது மேலும் தீவிரம் அடைந்தனர், ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பிற நாடுகளை அடிமைப்படுத்தவும் உலக ஆதிக்கம் பெறவும் முதலாளிகள் செய்துவரும் முயற்சிகள் இப்பொழுது தெளிவாகத்தெரிகின்றது. நெடுகிலும் பிற்போக்குக் கொள்கைகளை ஆதரித்தல், ஜனநாயக சுதந்திரங்களை அழிப்பதில் தீவிரம் காட்டுதல் சமுதாய வாழ்வையும் அரசியல் வாழ்வையும் பாசிஸமயமாக்கல் இவை ஏகாதிபத்தியத்தின் பண்புகளாகும்.

ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாரத்தையும், சுரண்டல் தன்மையையும் லெனின் அம்பலப்படுத்திஞர், வரலாற்றில் அதன் இடத்தைத் திட்டவட்டமாகவரையறுத்தார். 'ஏகாதிபத்தியம் என்பது ஒட்டுண்ணித் தன்மை படை இயக்கமும் தேசவிடுதலை இயக்கமும் எல்லா முற்போக்குச் சக்திகளும்ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒன்று திரண்டு வருகின்றன.

புதிய, உயர்ந்த, சிறந்த சமுதாய அமைப்பை நோக்கிப் புரட்சிகரமாக மாற வேண்டுமானுல் அதற்குத் தேவையான தன்வய, புறவயச் சூழ்நிலைகள் இவையே எனவே தான் ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் மிக உயர்ந்த கட்டம் என்பதோடு அதன் இறுதிக் கட்டமும் ஆகும். ஏகாதிபத்திய கட்டத்தின் இறுதியில் பாட்டாளிவர்க்கத்தின் சமுதாயப்புரட்சி நடைபெற்றே தீரும்.

1917 இல் வெற்றிபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியும், உலக சோஷலிச அமைப்பின் தோற்றமும், ஆகிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் இதற்கு முன் கண்டிராத தேச விடுதலை எழுச்சியும் மேலே கண்ட லெனினது ஆராய்சிமுடிவை மிகத் தெளிவாக நிரூபித்துள்ளன.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை

# வேலைநிறுத்தம தொடர்கிறது: தொழிலாளர் கலந்து கொள்ளார்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை சிமந்துக் கூட்டுஸ்தாபனத்தில் வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வர்த்தக ஊழியர் சங்கம் கொழும்பில் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தையொட்டி அதன் கிளை அங்கத்துவ சங்கமான காங்கேசன் சிமந்து கூட்டுஸ்தாபன ஊழியர் சங்கப்பிரதிநிதிகளும் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

மும்மொழிகளிலும்பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சிமந்துத் தொழிற்சாலைக்கு அருகாமையில் ஒருகட்டிடத்தில் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்'

இவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக வேலைநிறுத்தத்தில் இறங்கவேண்டுமா என்பது பற்றி மற்றும் சிமந்துத்தொழிலாளர் யூனியன்கள் கூடி ஆராய்ந்து வருவதாகத்தெரிகிறது.

சிமந்துத் தொழிலாளர்களின் நலன்கருதி இவ்வேலை நிறுத்தம் நடைபெறவில்லை எனவும் தமது தாய்ச்சங்கத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் நோக்கமான இவ்வேலை நிறுத்தத்திற்காக மற்றும் யூனியன்கள் அடையாள அனுதாபவேலை நிறுத்தம் செய்யத்தேவையில்லை எனவும் அவ் யூனியன்கள் முடிவு செய்துள்ளதாகதொழிற்சங்கத்தைச்சேர்ந்தவர்கள்தெரிவித்தனர். இவர்களின் வேலைநிறுத்தத்தால்உத்தியோகஸ்தர் பகுதியில் தான்சிறுபகுதி பாதிக்கப்பட்டுள்ளதாயும், வேறு பகுதிகள் பாதிக்கப்படவில்லை எனவும் தொழிற்சாலை அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. அமைதியான முறையில் வேலைநிறுத்தம்நிகழுகின்றது. ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் செய்து வருகின்றனர்.

— —

## மூன்று . .

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளின் கூட்டணி அபேட்சகர்களை வெற்றியீட்டச்செய்து கூட்டணி அரசாங்கம் ஏற்பட உதவவேண்டுமென்றும் பட்டதாரிகளை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

விவசாயிகள், கூட்டுறவுத் துறை, இலங்கைப்போக்குவரத்துச்சபை ஊழியர் ஆகியோரின் தூதுக்குழுக்களையும் அவர்கள் சந்தித்துப் பேசினர்.

சப் பிரயாணிகளை வரவேற்கக் கூடிய இன்பகரமான தென்னஞ்சோலைகளும், பசும் மெத்தை போன்ற கடற்கரைகளும் இருக்கின்றன். ஆங்காங்கே வாடிவீடுகளை அமைத்துவிட்டால், வெளிநாட்டவர் மட்டுமன்றி, நம் நாட்டவரு

இரத்தினபுரி உபதேர்தல்

## நியமனப்பத்திரங்கள் இன்று தாக்கல்

கோட்டை, சனி

இரத்தினபுரி உபதேர்தலுக்குப் போட்டியிடும் அபேட்சகர்கள் இன்று பகல் 12 மணிக்குத் தங்கள் மனுப்பத்திரங்களைத் தாக்கல்செய்வர். இந்த மனுப்பத்திரங்கள் பெறப்பட்டபின்னரே உபதேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும்எனத் தேர்தல் இலாகா அறிவித்துள்ளது.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. நந்தாஎலவெல, ஐக்கிய தேசியக் கட்சியைச்சேர்ந்த திருமதி மிலிசென்ற் அட்டிகலே, காலஞ்சென்ற இரத்தினபுரி ஆட்சிமன்ற அங்கத்தவரின் மனைவி திருமதி எல். குருப்பு, திரு. கே. வி. தர்மதாசா ஆகியோர் இந்த உபதேர்தலில் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது,

அரசாங்கம் குறுகியகால எல்லைக்குள் இத்தேர்தல் நடைபெறுகிறது என அறிவித்தால் ஆட்சிமன்றம் கலைக்கப்படுமுன்னர் இத்தேர்தல் நடைபெறும் எனவும் நீண்டகாலப் பகுதியாக விருந்தால் இத்தேர்தல் நடைபெருதெனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

படுகிறது. இதைஉற்பத்தியாளர்கள் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்கிருர்கள், இதைநிறுத்தி உள்நாட்டிலேயே இந்த எண்ணெயைப்பெற வசதிசெய்ய அரசாங்கம் நாட்டில் நிலக்கடலை உற்பத்தியை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது

இந்த நிலக்கடலை எண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதால் தற்போது முன்னரிலும் பார்க்க நிலக்கடலைப் பயிர்ச்செய்கை அதிகரித்துள்ளது. இதைமேலும் ஊக்குவித்து அன்னிய செலாவணியை மீதப்படுத்தவே அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது.

— —

## ஹரியானுவில் 1375 பேர் கைது

புதுடில்லி, பெப். 6

சண்டிகார் பஞ்சாப்புக்கு கொடுக்கப்படுவது சம்பந்தமாக ஹரியானுவில் எதிர்ப்பார்ப்பாட்டங்களில் இறங்கியவர்களில் 1375 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள்.

ஹரியானுவில் இப்பொழுது பூரண அமைதி ஏற்பட்டிருப்பதாகவும் நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறிஞர்கள்.

— —

## இடமாற்றம்

ஊரதீவு, வெள்ளி

நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் பிரதம வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். சுப்பிரமணியம் வாரியப்பொலை ஆஸ்பத்திரிக்கு பிரதம வைத்திய அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.


## திருமண அழைப்பு

திருநிறைச் செல்வன்
வ. நல்லையா
அவர்களுக்கும்
(கிராம நீதிமன்றம் சங்கானை)

திருநிறை செல்வி
புஷ்பவதி
அவர்களுக்கும்

நிகழும் சௌமிய ஆு தைத்திங்கள் இருபத்தேழாம் நாள் (9-2-70) திங்கட்கிழமை நண்பகல் 12-30 தொடக்கம் பி. ப. 1-40 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண மங்கள விழாவில் தாங்கள் சுற்றஞ்சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு பேரன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
ந. த. இராசரத்தினம் தம்பதிகள்
பிரபல வர்த்தகர்
மணமகளின் பெற்ருேர்
மெயின் வீதி, சங்கானை.
1485


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org